விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalaijaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 06 சனிக்கிழமை (23.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 308



# விவசாயிகளுக்கு நீதி கோரி

# பாராளுமன்றில் ஆர்ப்பாட்டம்

## அரசுக்கு எதிராக சபையில் எதிரணி கோஷங்கள்

(கொழும்பு) உரம் உட்பட விவசாயிகளின் தற்கால பிரச்சினைகளுக்கு நீதிகோரி பாராளுமன்றில் நேற்று அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ராஜபக்ஷ அரசுக்கு எதிரான எதிரணியின் ஆர்ப்பாட்டத்தால் பாராளுமன்றமே அதிர்ந்தது. (15ஆம் பக்கம் பார்க்க)

பொதுப் பாதுகாப்பை முன்னெடுக்க

## நாடு முழுவதும் ஆயுதம் ஏந்திய இராணுவத்தினர்

### ஜனாதிபதி கோட்டா விசேட கட்டளை



(கொழும்பு) பொதுப் பாதுகாப்பை முன்னெடுத்து செல்வதற்காக ஆயுதம் ஏந்திய இராணுவத்தினரை நாடு முழுவதும் கடமையில் ஈடு படுத்தும் விசேட கட்டளை ஒன்று மீண்டும் ஜனாதிபதி கோட்டாவால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

பலத்த மின்னலுடன்

## வடக்கு, கிழக்கில் மழைக்கு சாத்தியம்

(யாழ்ப்பாணம்) பலத்த மின்னலுடன் வடக்கு, கிழக்கில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் 15

## நவம்பர் 1 முதல் பூஸ்டர் தடுப்பூசி

(கொழும்பு) நாட்டில் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் கோவிட் தடுப்பூசி திட்டத்தின் கீழ் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக 15

## அனைத்து ஆரம்ப பாடசாலைகளும்

திங்கள் முதல் ஆரம்பம்

(கொழும்பு) எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நாட்டில் அனைத்து ஆரம்ப பாடசாலைகளினதும் கல்வி நடவடிக்கைகளை ஆரம் 15

## வடக்கின் நிலைவரம் தொடர்பில் நீதியரசர் விக்னேஸ்வரனுடன் வடக்கு ஆளுநர் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்) வட மாகாணத்தின் தற்கால நிலைவரம் தொடர்பில் நீதியரசர் விக்னேஸ்வரனுடன் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்துரையாடியுள்ளார்.

சம்பிரதாயபூர்வமாக நேற்று பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் 15

சாவகச்சேரியில்

## முதியவர்கள் மூவர் திடீர் மரணம்

(சாவகச்சேரி) சாவகச்சேரி பகுதியில் மூன்று முதியவர்கள் திடீரென உயிரிழந்திருப்பதாக 15

தரம் 11,13 மாணவர்களுக்கான

## கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க தீர்மானம்

(கொழும்பு) நாட்டில்அனைத்து பாடசாலைகளிலும் தரம் 11, 13 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் சுகாதார பிரிவினர் கலந் 15

வவுனியாவில்

## உயிரிழந்த மூதாட்டிக்கு கொரோனா

(வவுனியா) வவுனியாவில் உயிரிழந்த 78 15

சபையில் கூட்டமைப்பினரை

## பயங்கரவாதிகளென்று அழைத்த ஆளுங் கட்சியினர்

### இரு கூட்டமைப்பினர் வெளியேறினர்

(கொழும்பு) தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை புலிகள் என்றும் பயங்கரவாதிகள் என்றும் அழைத்தமை 15

ஏல விற்பனை

கல்யாண் அடைவு கடை

23.10.2020 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகளின் முதலையும் வட்டியையும் செலுத்தி 25.10.2021 முன்னர் பெற்றுக் கொள்ளவும். தவறின் 26.10.2021 அன்றைய தினம் ஏல விற்பனை செய்யப்படும்.

(8362) முகாமையாளர்

இல. 13, கஸ்தூரியார் வீதி,
செம்மா தெரு, யாழ்ப்பாணம்.


# புளொட்டின் மூத்த உறுப்பினர் ஆனந்தி அண்ணர் காலமானார்



(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (புளொட்) அமைப்பின் அரசியற் கட்சியும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒரு பங்காளிக் கட்சியுமான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF) கட்சியின் செயலாளர் சுப்பிரமணியம் சதானந்தம் நேற்று வெள்ளிக்கிழமை, சுகவீனம் காரணமாக காலமானார்.

ஆனந்தி அண்ணர் என்று அழைக்கப்படும் சதானந்தம் 1945ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி உடுப்பிட்டி, கொம்மாந்துரை கிராமத்தில் பிறந்தவர். 1970 களின் ஆரம்பம் முதலே 'காந்தீயம்' அமைப்பில் இணைந்து பணியாற்றி வந்திருந்தார்.

'காந்தீயம்' அமைப்பின் பணிப்பாளர் மருத்துவர் ராஜசுந்தரம் கைது செய்யப் பட்டதை அடுத்து, தானும் தேடப்படத் தொடங்கிய ஒரு சூழ்நிலையில், தலை மறைவு வாழ்வுக்குள் சென்றார். அதனைத் தொடர்ந்து ஆனந்தி அண்ணர் உமாமகேஸ்வரன் அவர்களுடன் இணைந்து புளொட் அமைப்பில் தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் செயற்பட்டுவந்தார்.

1989ஆம் ஆண்டு, புளொட் அமைப்பு தனது அரசியற் பிரிவை, ஓர் அரசியற் கட்சியாக இலங்கையில் பதிவு செய்த போது "ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி" என்ற அந்த அரசியற் கட்சியின் செயலாளராக உமாமகேஸ்வரன் அவர்களால் ஆனந்தி அண்ணர் நியமிக்கப்பட்டிருந்தார்.

அன்றிலிருந்து இன்று வரை அவர் அந்த பொறுப்பில் இருந்து செயற்பட்டு வந்தார். அவரின் இறுதிக் கிரியை நிகழ்வு கருவேற்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு என்ற முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

இவரின் மறைவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். (ம-03)

## இளவாலை மக்களின் இரங்கல்...



அமரர்
சைவப்புலவர்
சு. செல்லத்துரை

எமது இளவாலைக் கிராமத்தின் பெரும் புலமைச்சொத்தாக, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய முன்னைநாள் அதிபராக, சைவப்புலவராக, கலாபூஷணமாக பாடசாலைக்கும், ஆலயங்களுக்கும், சைவத்தமிழுக்கும், இளவாலை ஊருக்கும் பெரும்பணியாற்றிய கலாபூஷணம் சு.செல்லத்துரை அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு உலகெங்கும் பரந்துவாழும் இளவாலைக் கிராமத்தவர்கள் அனைவரும் பெருந்துயருற்றோம்!

இறைபாதத்தில் அன்னாரது ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- இளவாலை மக்கள் ஒன்றியம் -

(8358)

## கண்ணீர் அஞ்சலி



கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர்
திருமதி **ஜெயந்தி தனபாலசிங்கம்** அவர்களதும்
கிளி / ஜெயபுரம் மகா வித்தியாலய அதிபர்
திருமதி **சிவானந்தி பரதன்** அவர்களதும் அன்புத் தந்தையார்

அமரர் **கதிரவேலு பொன்னுச்சாமி**

அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு எமது அழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள் சங்கம்
கிளிநொச்சி மாவட்டம்

(C-2867)

## மரண அறிவித்தல்

அன்னையின் மடியில்
13 - 04 - 1949



இறைவனின் அடியில்
19 - 10 - 2021

### சற்குணதேவி சிவராசா

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி பிராங்போர்ட், ஒபர்கௌசனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குணதேவி சிவராசா கடந்த 19.10.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னலட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவராசாவின் அருமை மனைவியும் சிவகணன், சிவானி ஆகியோரின் பாசமிகு தாயாரும் வேறா, ராம் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுசிலாதேவி, சரோஜினிதேவி, சற்குணநாதன், புஸ்பநாதன், பூலோகநாதன், றஞ்சினிதேவி, ராகினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சந்திரகாந்தன், கிருபாநிதி, சந்திராதேவி, ஆனந்தினி, சிவயோகன், மோகனதாஸ், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், பராசக்தி, நல்லநாயகி மற்றும் கண்மணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஷெனன், ஃபியோன், இலெனியா, இனியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் திரு. திருமதி டௌலிங், திரு. திருமதி சந்திரசேகரம் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் (25.10.2021) திங்கட்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை Haupt Friedhof, Zeppelinstr 132, 45470 Mulheim என்னும் முகவரியில் அமைந்துள்ள மயானத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு ஈமக்கிரியைகள் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (8364)

கேலேஸ் பண்ணை,
வீரவாணி, வாதரவத்தை, புத்தூர்.
077 886 6806
சின்னத்துரை சற்குணநாதன் (சகோதரன்)
பொன்னம்பலம் தங்கராசா (உடன்பிறவா சகோதரன்)

## கண்ணீர் அஞ்சலி

இளவாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், செயலாளராக சங்கத்தை வளர்த்து எடுத்த பெருமைக்குரிய

சைவப்புலவர் கலாபூஷணம்
சு.செல்லத்துரை



அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இளவாலை வடக்கு
கிராம அபிவிருத்தி சங்கத்தினர்
(8359)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
**வே.பரணீதரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்
**சின்னத்தம்பி வேலுப்பிள்ளை**



அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரிய சகோதரத்துவம்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(C-2863)

# ஒரு கிலோ கீரிச்சம்பா 125 ரூபாய்

## வர்த்தகத்துறை அமைச்சர்

(கொழும்பு)

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட கீரிச் சம்பா அரிசியின் விலை ஒரு கிலோ 125 ரூபாய் என்ற ரீதியில் சந்தைப்படுத்தவிருப்பதாக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி, அடுத்தவாரம் முதல் சதொச ஊடாக இந்த அரிசி விநியோகம் இடம்பெறும் என அவர் தெரிவித்ததுடன் மீண்டும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்படுமா? என்பது தொடர்பாக இப்போதைக்குக் கூற முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# “சீனி வாங்க வரிசை, பால்மா வாங்க வரிசை....” இதற்காகவா 69 லட்சம் பேர் வாக்களித்தனர்

(கொழும்பு)

**அரசாங்கத்தால் வேலை செய்ய முடியாது. விலைகளை அதிகரிக்க மட்டுமே முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

அரசாங்கத்தின் தோல்வியடைந்த பொருளாதார முகாமைத்துவம் காரணமாக நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்றவர்கள், அரச ஊழியர்கள், நாட்டு மக்கள் எவ்வாறு வாழ்வது? ஆசிரியர்களுக்கு வழங்கிய கொஞ்சத்தையும் சமையல் எரிவாயு விலையை அதிகரித்து பிடித்துள்ளனர்.

எமது நாட்டின் விவசாயிகள் உரம் இல்லாமல், கிருமிநாசினி இல்லாமல் இன்று வீதிக்கு தள்ளப்பட்டுள்ளனர். பெருமையுடன் வாழ்ந்த விவசாயிகள் வறுமையால் அவதிப்படுகின்றனர். இன்று எமது நாட்டில் வரிசை யுகம் ஒன்று உருவாகி உள்ளது. சீனி வரிசை , அரிசிவரிசை, எரிவாயு வரிசை,பால்மா வரிசை எனப் பல வரிசைகள் உள்ளன. 70 - 77 யுகத்தை தற்போது காணக்



கூடியதாக உள்ளது. இதற்காகவா 69 இலட்சம் மக்கள் ஆணையை வழங்கினர். இந்த அரசாங்கத்திற்கு வேலை செய்யத் தெரியாது, விலைகளை அதிகரிக்க மட்டும் தான் முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

## எதிர்க்கட்சி சபையில் எச்சரிக்கை

(கொழும்பு)

விவசாயிகள் சேதன பசளையை பயன்படுத்தவேண்டும் என அரசாங்கம் உடனடியாக தீர்மானம் எடுத்ததன் விளைவாகவே விவசாயிகள் பாதிக்கப்பட்டு, வீவசாயப் பூமிகள் அழிவடைந்திருக்கின்றன.

இந்த நிலை தொடர்ந்தால் எதிர்வரும் ஏப்ரல் மாதமாகும் போது நாட்டில் பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் பொருட்களின் விலையும் இரண்டு மடங்கு அதிகரிக்கும் என எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நாட்டில் ஏற்பட்டிருக்கும் உரப் பிரச்சினை தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

உரப்பிரச்சினை தற்போது கழுத்துக்கு மேலால் சென்றிருக்கிறது. விவசாயிகளுக்கு பதில் செல்ல முடியாத நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கின்றது என அவர் தெரிவித்தார். (நி-5)



“எங்கட புத்தகங்கள்” கண்காட்சியும் விற்பனையும் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறித்த கண்காட்சி நிகழ்வை யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் கலந்து கொண்டு சம்பிராதயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து மூன்று தினங்களும் காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை இடம்பெறும்.

(படம்-ரவிசாந், சிவசாந்தன்)

# உரத்தட்டுப்பாடு பிரச்சினைக்கு பாராளுமன்றில் போராட்டம்

(கொழும்பு)

உரத்தட்டுப்பாடு பிரச்சினைக்கு நிவாரணம் கோரி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உரத்தட்டுப்பாட்டிற்கு விரைவில் உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்குமாறு அவர்கள் அரசாங்கத்தை



வலியுறுத்தினர்.

கையில் எதிர்ப்பு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-5)

# ரயில் சேவைகள் மீள ஆரம்பம்

(கொழும்பு)

ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

அதற்கமைய எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் மேல் மாகாணத்துக்குள் ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்படுமென அவர் அறிவித்துள்ளார்.

இதேநேரம், எதிர்வரும் முதலாம் திகதி முதல் மாகாணங்களுக்கு இடையிலான ரயில் சேவைகளும் முன்னெடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# மின் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது காமினி லொக்குகே தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் எவ்விதத்திலும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது என மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்தார். (நி-5)

# வலைத்தளங்களில் போலியான தகவல்களை பரப்புபவர்களுக்கு எதிராக புதிய சட்டம்

(கொழும்பு)

சமூக வலைத்தளங்களில் போலியான தகவல்கள் பரப்பப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கான சட்ட மூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்று முன்வைக்கப்படவுள்ளது.

இந்த சட்டத்தின் ஊடாக சமூக வலைத்தளங்களில் பரவும் போலியான செய்திகள் கட்டுப்படுத்தப்படுமே தவிர, மக்களின் உரிமைகள் மீறப்படமாட்டாது என்றும் அவர் தெளிவுபடுத்தினார். (நி-5)

# தேசிய அடையாள அட்டை சேவை ஒரு நாள் விநியோகம் ஆரம்பம்

(கொழும்பு)

கொவிட் பரவல் நிலைமை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த அடையாள அட்டை விநியோகிப்பதற்கான ஒரு நாள் சேவை நாளை மறுதினம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கொவிட் பரவல் நிலைமை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கான ஒரு நாள் சேவை மற்றும் நேரம் ஒதுக்கப்பட்டிருந்த சேவை பெறுநர்களுக்காக எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஒரே சந்தர்ப்பத்தில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் முன்பாக, பெருமளவான மக்கள் சேவையைப் பெறுவதற்காக ஒன்றுகூடுவது அபாயம் மிக்கது என்பதால் மட்டுப்படுத்தப்பட்டளவில் சேவை பெறுநர்களை பத்தரமுல்லை பிரதான அலுவலகத்திலும் காலி தென் மாகாண அலுவலகத்தில் இந்த ஒரு நாள் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.(நி-5)

# சுப்பர் 12 சுற்றுக்குள் நுழைந்தது

# ஸ்கொட்லாந்து அணி




இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில், ஓமான் அணிக்கெதிரான போட்டியில் வெற்றிபெற்று ஸ்கொட்லாந்து அணி சுப்பர் 12 சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

அல் அமரத் மைதானத்தில் நேற்று முன்தினம் குழு 'பி' பிரிவில் நடைபெற்ற பத்தாவது போட்டியில், ஓமான் அணியும் ஸ்கொட்லாந்து அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஓமான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஓமான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 122 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அகிப் இலியாஸ் 37 ஓட்டங்களையும் ஸிஷன் மக்சூத் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஸ்கொட்லாந்து அணியின் பந்துவீச்சில். டேவே 3 விக்கெட்டுகளையும் சப்யான் செரீப் மற்றும் லீஸ்க் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் மார்க் வாட் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 123 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணி, 17 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் ஸ்கொட்லாந்து அணி 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் ஸ்கொட்லாந்து அணி அடுத்த சுற்றான சுப்பர் 12 சுற்றுக்குள் நுழைந்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கைல் கோட்சர் 41 ஓட்டங்களையும் ரிச்சி பெரிங்டன் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 3 விக்கெட்டுகளை வீழ்த்திய ஜோஸ் டேவே தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# இலங்கை அணியை விட்டு நாடு திரும்பவுள்ளார் மஹல




இருபது-20 உலகக் கிண்ண தகுதிச் சுற்றுக்கான இலங்கை அணி ஆலோசகராக செயல்பட்ட ஜாம்பவான் மஹல ஜெயவர்தன, அணியை விட்டு வெளியேறி நாடு திரும்பவுள்ளார்.

தகுதிச்சுற்றில் 'ஏ' பிரிவில் முதல் இடம்பிடித்துள்ள இலங்கை அணி, இருபது-20 உலகக்கிண்ணக் 'சுப்பர் 12' சுற்றுக்கு முன்னேறியுள்ளது .இரசிகர்களிடையே ஆனந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் தகுதிச் சுற்றில் இலங்கை அணி ஆலோசக்ராக செயல்பட்ட மஹல ஜெயவர்தனே, தனிப்பட்ட காரணங்களுக்காக அணியை விட்டு வெளியேறி நாடு திரும்பவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஜெயவர்தனே கூறியதாவது, நாடு திரும்புவதற்கு முன் அனைத்தையும் கட்டமைத்து அணிக்கு சிறந்த யோசனையை தருவேன். ஐ.பி.எல் தொடருக்காக ஷார்ஜாவில் இருந்ததன் மூலம் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு அணிக்கு உதவுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நான் மேலும் தங்குவது கடினம். நான் நிச்சியமாக நாடு திரும்ப வேண்டும். ஜூன் மாதம் முதல் எனது மகளை நான் பார்க்க வேயில்லை. இருபது-20 உலகக்கிண்ணம் மீதமுள்ள போட்டிகளுக்காக தொழில்நுட்பம் வழியாக இலங்கை அணிக்கு உதவுவேன் என மஹல ஜெயவர்னே தெரிவித்துள்ளார். (4-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2432

### துவராகா

ஒருத்தனுக்கு உள்நாட்டுக்குள்ளயே சுத்தி பார்க்க வக்கில்லயாம்



இதுல வெளிநாடு போய் சுத்தி பார்க்க prizer ஊசிக்கு wait பண்றானாம்..

### தர்மிளன்

போன வருஷ தீபாவளிக்கு வாங்கியதே இன்னமும் மீதி இருக்கு.. அதுக்குள்ள அடுத்த தீபாவளி வந்துடுச்சு வத்தியாரே



என்னது பட்டாசா மீதி இருக்கு..?



அட கடன் ன சொன்னன் வாத்தியாரே

### நிவேதிகா

காகம் கரைந்தது விருந்தாளிகள் வருகை என்று...



சேவல் பதறியது விருந்தாக போகிறோம் என்று..!!

### கபில்ராஜி

பல்லுல மாட்டுன நார் எங்க இருக்குன்னு கரெக்ட்டா சொல்லியும் தப்பான இடத்துல தேடிட்டு இருக்கும் போது




நாக்கு:- நான் எங்க சொன்னா அவன் எங்க தேடுறான் பாரு

### வினோ




Aunty கொஞ்சம் சக்கரை இருந்தா குடுங்க அம்மா கேட்டாங்க



இவன்கூட ஒன்னா படிச்சோம் நம்மல மறந்துட்டான் போல

### டிலக்சன்

என்னது..? பாப்பா ஆண்லைன்ல படிக்குதா...



ஏன்டி.. காலங்கெட்டுக் கிடக்கு.. பொம்புள பிள்ளைய மரியாதையா பெண்லைன்ல படிக்க வை... புரிஞ்சுதா...?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

**23.10.2021**
**ஐப்பசி 06, சனிக்கிழமை**
**திருதியை பின்னிரவு 2.05 மணிவரை**
**கார்த்திகை முன்னிரவு 9.49 மணிவரை**
**சுபநேரம் 3.02-4.32 மணிவரை**
**இராகுகாலம் 9.02-10.32 மணிவரை**
**சந்திராஷ்டமம்: சித்திரை, சுவாதி, கார்த்திகை விரதம்**

**வளவன்**

**மேஷம்**: யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பணத் தேவைகள் நிறைவு பெறும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**ரிஷபம்**: உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆச்சரியத் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.

**மிதுனம்**: எடுத்த காரியங்களை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**கடகம்**: வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்**: எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**கன்னி**: தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**துலாம்**: மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்**: சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு**: புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், காரிய நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்**: வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்**: வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மீனம்**: பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், பகை விலகி பாசம் கூடும் நாள்.

நீ நினைத்தால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்காலம்.

# சைவப்புலவர் செல்லத்துரையின் மறைவு சைவ மக்களை வேதனையடையச் செய்துள்ளது

## கலாநிதி வைத்தீஸ்வரக்குருக்கள் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

சைவ சமயத்தின் முதுசம் என விளங்கிய சைவப்புலவர் செல்லத்துரை இறைபத செய்தி அறிந்து மிகவும் மனவேதனை அடைந்தோம் என இந்துக்குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ. கு.வை.வைத்தீஸ்வர குருக்கள் தெரிவித்தார்.

நேற்று அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

அனைவரது அன்புக்குரியவராகவும், மதிப்பார்ந்தவராகவும், போற்றுதலுக்குரியவராகம் விளங்கியவர் அமரர். செல்லத்துரை. சைவப்புலவர் சங்கத்தினூடாக இலங்கை முழுவதும் பல சைவப்புலவர்கள் உருப்பெறக் காரணமானவர்.

புராணபடன மரபில் கைதேர்ந்தவர். புராணபடன மரபு இலங்கையில் தழைக்க வேண்டும் என தன்னுடைய சக்திக்கு ஏற்ற வகையில் பல முயற்சிகள் செய்து இயன்ற வெற்றி கண்டவர். தனது சீர் பெற்ற கல்விப்பணி மூலம் பல உயர் பண்பாளர்களை உருவாக்கிய பெருந்தகை சைவ வாழ்வியலை பாதுகாத்து பேணியதுடன் வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர். செல்லத்துரை ஐயாவின் மறைவு சைவ மக்களுக்கு மிகவும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது. அமரரது ஆத்ம சிவப்பிராப்திக்கு இறை பிரார்த்தனை செய்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-7)

# கோப்பாயில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம்

## முதியவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த வாள் வெட்டுக்குழு வீட்டின் மீது தாக்குதலை மேற்கொண்டதுடன், வீட்டில் இருந்த முதியவர் மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

குறித்த தாக்குதலில் கோப்பாய் பூதர்மடத்தடியைச் சேர்ந்த முதியவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கூரிய ஆயுதங்களுடன் புகுந்த கும்பல் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை அடித்து நொருக்கியதுடன், வீட்டின் மீதும் தாக்குதலை மேற்கொண்டு , வீட்டில் இருந்த முதியவர் மீதும் தாக்குதலை மேற்கொண்டனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-7-18-33)

## இன்றும் நாளையும்

## பிறவுண் வீதி, சட்டநாதர் வீதி போக்குவரத்து தடைப்படும்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பிறவுண் வீதியும் சட்டநாதர் வீதியும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் தடைப்பட்டிருக்கும் என யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

குறித்த வீதிகளை ஐ ரோட் திட்டத்தின் கீழ் கார்பெட் இடும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்குடன் மேற்படி பகுதிகளுக்கான போக்குவரத்து தடைப்பட்டிருக்கும் எனவும் இதனால் ஏற்படும் சிரமங்களைப் பொறுத்துக் கொள்ளுமாறும் யாழ். மாநகர முதல்வர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (4-7-18)


**மணமக்கள் தேவை**

யாழ்.குருநகுலத்தைச் சேர்ந்த முகாமைத்துவ உதவியாளர் (ஆண்) திருவோணம். பூரட்டாதி (பெண்) 1970 மாற்றுச் சம்பந்தமும் ஏற்றுக் கொள்ளப்படும். (8352)

077 512 2931



# துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை
ஆசிரியை திருமதி
**தாரணி**
**செல்வச்சந்திரன்**
அவர்களின் மாமனார்
**திருநாவுக்கரசு**
**நாகச்சந்திரன்**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்
தினருக்கு எமது ஆழ்ந்த
இரங்கலை தெரிவிப்
பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம் (8348)
யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை.



# கண்ணீர் அஞ்சலி

கலாபூஷணம் சைவப்புலவர்
## சு.செல்லத்துரை



சைவப்புலவர் சு.செல்லத்துரை
அவர்கள் இறைபதம் அடைந்த
செய்தியறிந்து பெருந்துயர்
அடைகின்றோம். யாழ்ப்பாணம்
சைவ பரிபாலன சபையின்
உப தலைவராக இருந்து சமயப்
பணியாற்றியவர். சபையினால்
நடாத்தப்படும் சமயபாட பரீட்சைகளுக்கு
உதவி வழங்கியும்
சேவையாற்றியவர். அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
(C-2861)

66, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

சைவ பரிபாலன சபை.

# வீதியை விட்டு விலகிய ஹயஸ் வாகனம்



(கரணவாய்)

வல்வைப் பகுதியில் பயணித்த ஹயஸ் ரக வாகனமொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

இவ்விபத்தில் ஹயஸ் ரக வாகனம் சிறிதளவு சேதமடைந்ததுடன் வாகனத்தில் பயணித்தவர்கள் சிறுசிறு காயங்களுக்குள்ளாகினர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி போக்குவரத்துபொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7-60)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கரகம்பைக் குறிச்சி அ.த.க பாடசாலையில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் தென்மராட்சி கல்வி வலயத்தினால் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் 05.11.2021 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி, சாவகச்சேரி" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (4-7)

●●●●●●●●●●●●●●●●●●●

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட வகையில் பிபிரிஏ (PPTA) என்ற திட்டத்தின் கீழ் பனையோலை தொடர்பான விசேட பயிற்சி எதிர்வரும் நவம்பர் மாத முதல் வாரத்தில் மூன்று நாள் விசேட பயிற்சியாக இடம்பெறவுள்ளது.

இவ்விசேட பயிற்சியானது பனை வளத்தினை முழுமையாகப் பயன்படுத்தி ஏற்றுமதியினை இலக்காகக் கொண்ட கைப்பணிப் பொருட்களை உருவாக்கும் விசேட பயிற்சியாக இடம்பெறும்.

எனவே இப்பயிற்சியில் ஆர்வம் உடையவர்கள் எதிர்வரும் 29.10.2021 வெள்ளிக்கிழமைக்கு முன்பாக பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், வயது, அடையாள அட்டை இலக்கம் உள்ளிட்ட சுயவிபரங்களை குறித்து தலைவர்/செயலாளர், பிரதேசசபை, காரைநகர் எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு செயலாளர் கே.விஜேயேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு 021 2251735 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (4-7)

●●●●●●●●●●●●●●●●●●●

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் இரண்டாம் கல்வியாண்டிற்கு பின்வரும் தொழிற்கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அந்தவகையில்கடல்உணவு தொழில்நுட்ப டிப்ளோமா (NVQ-5), நீரில்வளர்ப்பு மற்றும் நீரியல் வள முகைமைத்துவ டிப்ளோமா (NVQ-5), நீரில் வளர்ப்பு தொழில்நுட்பவியல்(NVQ-4), வெளிஇணைப்பு இயந்திர பொறிவலர் (NVQ-3), கடலக மாலுமி (NVQ-4), ஆழ்கடல் சுழியோடி (NVQ-3), உயிர் பாதுகாப்பு (NVQ-3/4), அலங்கார மீன் வளர்ப்பும் முகாமைத்துவமும், நீச்சல், கடலக வரை படம் வாசித்தலும் செய்மதி தொடர்பாலும் (GPS) ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிகளுக்கு க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் தோற்றியவர்கள் மற்றும் துறைசார் அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

மேலும் இக்கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு உள்நாடு மற்றும் வெளி நாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தேசிய தொழிற்தகமைச் சான்றிதழினை (NVQ) பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்படிகற்கை நெறிகளைக் கற்க விரும்புபவர்கள் உரிய விண்ணப்படிவங்களை இலங்கை சமுத்திர பல்கலைக் கழக யாழ்.பிரந்திய அலுவலகத்தில் பெற்று 10.11.2021 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கமாறும் விண்ணப்பங்களை 076 293 9888 எனும் வட்ஸ் அப் இலக்கம் மூலமும் பெற முடியும். மேலதிக தொடர்புகளுக்கு 021 738 8188/9 , 071 834 9073, 070 378 3850 எனும் தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் யாழ்.பிராந்திய அலுவலக உதவிப்பணிப்பாளர் எஸ்.எஸ். கிருஷ்ணலிங்கம் அறிவித்துள்ளார். (4-7)

# வாகன இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து 2021.10.14 ஆம் திகதி யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்பு பலகையில் காட்சிப் படத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாக னப் புதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன்பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ் . மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் ய.பரந்தாமன் அறிவித்துள்ளார். (4-7)

# மணல் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல்செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான ஒரு தொகுதி மணல் நீதி மன்ற வளாகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் மணல் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும்.

காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏலத்தில் மணல் கொள்ளவனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்க வேண்டும்.

அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் மணலை அன்றைய தினமே உடனடியாக வளாகத்தலிருந்து அகற்ற வேண்டும் என யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 200 |
| தக்காளி | 150 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 |
| கோவா | 140 | 180 | 200 |
| கரட் | 160 | 180 | 200 |
| பூசணி | 60 | 60 | 50 |
| புடோல் | 180 | 120 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 250 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 180 |
| பாகற்காய் | 600 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 150 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 |
| பயற்றங்காய் | 280 | 240 | 300 |
| லீக்ஸ் | 230 | 280 | 240 |
| பீற்றூட் | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 350 | 280 | 350 |
| முருங்கைக்காய் | 250 | 240 | 280 |
| போஞ்சி | 240 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 300 | -- | 160 |
| கீரை – 1 பிடி | 80 | 50 | 80 |
| தேசிக்காய் | 400 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 300 | 260 | 280 |
| வெங்காயப்பூ | 180 | -- | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 45 | 50 | 30 |
| வல்லாரை | 80 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- | 120 |

# சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார் பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீவிரகத்தி விநாயகர் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திரு வீதி வலம் வருவார் என சிவஸ்ரீ து.விவேகானந்த குருக்கள் அறிவித்துள்ளார். (4-7)

# கஞ்சாவுடன் கைதானவர் பிணையில் விடுவிப்பு

(கரணவாய்)

கஞ்சா உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிற்காக துன்னாலை வேம்படி பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 1,400 மில்லிகிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்டவரை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போது அவரை 25 ஆயிரம் ரூபாய் காசுப் பிணையிலும் ஒரு இலட்சம் ரூபாய் ஆள் பிணையிலும் செல்லுமாறு நீதவான் பொ.கிருஷாந்தன் உத்தரவிட்டார். (4-7-60)

# நவம்பர் 8 ஆம் திகதி விசேட பாராளுமன்ற தினம்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி விசேட பாராளுமன்ற தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் பதில் வழங்க முடியாமல்போன 50 வினாக்களுக்கு பதிலளிக்க சந்தர்ப்பம் வழங்குவதற்காக இந்த விசேட பாராளுமன்ற தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கூடிய பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான செயற்குழுவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சபைத் தலைவர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் பாராளுமன்றத்தில் தலா 02 கேள்விகளை முன்வைத்து பதிலை பெற்றுக் கொள்வதற்காக ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி சந்தர்ப்பம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# 31ம் நாள் நினைவு அஞ்சலி



பிறப்பு
26 – 05 – 1941

இறப்பு
23 – 09 – 2021

அமரர்.

## கனகசுந்தரம் தவமணி

பிறப்பு உண்டேல் இறப்பு நியதி
இருப்பினும் உங்கள் இழப்பை ஏற்க முடியவில்லை அம்மா
சிரித்த முகத்துடன் எம்மை வரவேற்று உபசரித்து
அன்பு செய்த உங்களின் இழப்பை எம்மால்
ஏற்க முடியவில்லை அம்மா

எமது துயரில் கலந்து கொண்டு தொலைபேசி ஊடாகவும் நேரில் வந்தும் பதாகைகள், துண்டுப்பிரசுரம் பிரசுரித்தவர்கள், மலர் வளையங்கள் மூலம் அஞ்சலி செலுத்திய 92 Batch யாழ்ப்பாண கல்லூரி பழைய மாணவர்களுக்கும் மற்றும் பல உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேள் நியூ பசன் கவுஸ்
சங்கானை.

குடும்பத்தினர்,
வடலியடைப்பு.

(C-2862)

## பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து) பருத்தித்துறை

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி: லொறிச்சாரதி - 312/14**

1. சம்பள அளவுத்திட்டம் :- 15960-135X10-145X10-18760 (கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இல 04/2018 ற்கு அமைவானது)
2. தகைமைகள்:- தரம் 05 சான்றிதழுடன் பஸ்/லொறி/இழுவைப் பெட்டியுடன் ரக்ரர் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 02 வருடத்திற்கு குறையாத தொழில் அனுபவம் உடையவராகவும் தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
3. வயதெல்லை : 18 தொடக்கம் 45 வரை (கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரிகளுக்கு இவ் வயதெல்லை பொருந்தாது).
4. விண்ணப்பிக்கும் முறை:-
   - கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் குறித்த சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க முடியும்.
   - **"தலைவர், பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் 1ம் குறுக்குத் தெரு பருத்தித்துறை"** எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
   - விண்ணப்பப் படிவத்துடன் கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், சேவை அனுபவச் சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி:- 2021.11.10
குறிப்பு:- சங்க எல்லைப்பரப்பில் வதிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தலைவர், பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம் (வ/து)**
**1 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.**

(C-2853)

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
# ஆதனப் பெயர்மாற்றம்
## 15, மூளாய் வீதி, 4ம் ஒழுங்கை, வட்டாரம் - 11

வலிகாமம் மேற்கு பிரதேசசபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 11 மூளாய் வீதி, 4ம் ஒழுங்கையில் உள்ள இல: 15 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **வினாசித்தம்பி சதாசிவம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 725/09.12.1947ம் இலக்க உறுதியால் **கதிரவேலு சுப்பிரமணியம் கைம்பெண் இராசம்மா** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் பெண் மகேஸ்வரி** ஆகியவர் மேற்படி ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியலாய் 3/4 பங்கு ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7780/23.02.1949ம் இலக்க உறுதியால் **வினாசித்தம்பி சதாசிவம்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சிற்றம்பலம் சுப்பிரமணியம் பெண் சிவபாக்கியம்** ஆகியவர் குறித்த முழு ஆதனத்தில் சொரியலாய் 1/4 ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 890/03.06.1949ம் இலக்க உறுதியால் **வினாசித்தம்பி வேலுப்பிள்ளையும் பெண் சின்னம்மாவும்** ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்திற்கு சொரியலாக 3/4 பங்கிற்கு **வேலுப்பிள்ளை சுப்பிரமணியமும் பெண் மகேஸ்வரியும்**, 1/4 பங்கிற்கு **சிற்றம்பலம் சுப்பிரமணியம் பெண் சிவபாக்கியம்** சொந்தக்காரர்களாகவிருந்து குறித்த ஆதனத்தினை சொரியலாக ஆட்சி செய்வது வசதியீனமாகயிருந்தமையால் பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3746/25.02.1968ம் இலக்க உறுதியால் பிரிவிடல் செய்து நிந்தமாக்கப்பட்ட ஆதனங்களுக்கு சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**கந்தையா கனகரத்தினம்** ஆகியவர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு ச.வை. சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 14942/15.09.1984ம் இலக்க உறுதியால் **வேலுப்பிள்ளை காராளசிங்கம்** ஆகியவரிடம் இருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை **கதிரவேல்பிள்ளை சிவசின்மயானந்தன் பெண் கலாநாயகி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5507/11.05.1985ஆம் இலக்க உறுதியால் குறித்த **கந்தையா கனகரத்தினமும் பெண் நடேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த முழு ஆதனத்தில் மற்றையப் பகுதியினை **கதிரவேல்பிள்ளை சிவசின்மயானந்தனும் பெண் கலாநாயகியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5661/08.08.1985 ஆம் இலக்க உறுதியால் **கந்தையா** குறித்த **கனகரத்தினமும் பெண் நடேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **கதிரவேல்பிள்ளை சிவசின்மயானந்தனும் பெண் கலாநாயகியும்** ஆகியவர்கள் தமக்கு குறித்த ஆதனத்தின் சொந்தமும் ஆட்சியும் குறித்த 5507 மற்றும் 5661ம் இலக்க அறுதி உறுதிகள் மூலமும் நீண்டகால ஆட்சி மூலமும் வந்தடைந்ததென்றும், அவற்றின் முன்னுறுதியான குறித்த 3746ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரிவிடுதல் உறுதி மூலம் பர.நில.இலா 16 குளி 04.31 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்திற்கு வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் பெண் மகேஸ்வரி ஆகியவர் சொந்தமும் உரித்தும் உடையவரானார் என்றும் குறித்த வேலுப்பிள்ளை சுப்பிரமணியமும் பெண் மகேஸ்வரியும் ஆகியவர்கள் மலாய்நாட்டில் இருந்தமையால் நேரில் சமுகம் தர முடியாத காரணத்தால், வேலுப்பிள்ளை காராளசிங்கம் ஆகியவரை 11.11.1967ம் திகதி தமது விசேட அற்றோனி தத்துவக்காரராக நியமித்திருந்தார்கள் என்றும் குறித்த 3746ம் இலக்க பிரிவிடுதல் உறுதியினைத் தொடர்ந்து குறித்த 14942ம் இலக்க உறுதி மூலம் கந்தையா கனகரத்தினம் ஆகியவர் குறித்த வேலுப்பிள்ளை காராளசிங்கத்திடம் இருந்து அறுதியாக பெற்றிருந்தார் என்றும், தற்கால தேவை கருதியும் குறித்த ஆதனடாப்பில் உள்ள ஆதனம் யாவும் ஒரே ஆதனம் என்பதை உறுதிப்படுத்தவும் குறித்த இவ்வாதனத்தின் உரித்து தம்மை வந்தடைந்தது என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2046/25.02.2020ம் இலக்க உறுதிப்படுத்தல் உறுதியினை நிறைவேற்றியுள்ளார்கள்.

குறித்த ஆதனத்தினை **வீரசிங்கம் மீனேஸ்வரனும் பெண் மலரும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2113/12.08.2020ம் இலக்க உறுதியால் குறித்த **கதிரவேல்பிள்ளை சிவசின்மயானந்தனும் பெண் கலாநாயகியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **வீரசிங்கம் மீனேஸ்வரனும் பெண் மலரும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **வீரசிங்கம் மீனேஸ்வரனும் பெண் மலரும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(8340)

# தாய்வானை அமெரிக்கா பாதுகாக்கும் ஜனாதிபதி பிடன் உறுதி



(வோஷிங்டன்)

தாய்வானை பாதுகாப்பதில்மைக்கு அர்ப்பணிப்பு உள்ளது எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ஜோ பிடன், சீனா தாக்கினால் தாய்வானை அமெரிக்கா பாதுகாக்கும் என்றும் தெரிவித்தார்.

சி.என்.என். டவுன்ஹாலில் வியாழக்கிழமை நடைபெற்ற நேரடி உரையாடலின்போது, தாய்வானை பாதுகாப்பதாக உறுதியளிக்க முடியுமா? என்று கேள்விக்கு பதிலளித்த ஜோ பிடன், ஆம், நான் சீனாவுடனான பனிப்போரை விரும்பவில்லை.

நாங்கள் பின்வாங்கப் போவதில்லை என்பதை சீனாவுக்குப் புரியவைக்க விரும்புகிறேன. நாங்கள் எங்கள் கருத்துக்களை மாற்றப் போவதில்லை" என்று கூறியுள்ளார்.

சீனா, தாய்வானைத் தாக்க முயன்றால் பாதுகாப்புக்கு அமெரிக்கா வருமா? என்று கேள்வி எழுப்பட்ட போது, "ஆம், அதைச் செய்ய எங்களுக்கு ஒரு அர்ப்பணிப்பு உள்ளது." என்று அழுத்தமாக தெரிவித்தார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் தனது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு எதிராக இராஜதந்திர மற்றும் இராணுவ அழுத்தத்தை அதிகரிப்பதால் தாய்வானைப் பாதுகாப்பதற்கான அமெரிக்க உறுதிப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில் பிடன் நிர்வாகம் அதிகரித்து வரும் அழைப்புகளை எதிர்கொண்டுள்ளது.

பீஜிங், தாய்வானை சீனாவின் ஒரு பகுதியாகக் கருதுகிறது மற்றும் தீவை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர இராணுவப் படையைப் பயன்படுத்துவதற்கான உரிமையைப் பாதுகாத்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.(7-4)

# 'கிரே' பட்டியலில் தொடரும் பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

பயங்கரவாதத்துக்கு நிதி உதவி, பண மோசடி தொடர்பாக "கிரே" எனப்படும் மோசமான நாடுகள் பட்டியலில் பாகிஸ்தான் தொடர்ந்து இடம் பெறும் என தகவல் வெளியாகியுள்ளது.

பிரான்சின் பாரிசை தலைமையிடமாக வைத்து செயற்படும் எப்.ஏ.டி.எப் அமைப்பு சர்வதேச அளவில் பயங்கரவாதத்துக்கு நிதி கிடைப்பதை தடுக்கவும் பண மோசடிகளைத் தடுக்கவும் அந்தந்த நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகளின் அடிப்படையில் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

இந் நிலையில் "கிரே" எனப்படும் மோசமான நாடுகள் பட்டியலில் பாகிஸ்தான் கடந்த 2018 இலிருந்து இடம் பெற்றுள்ளது. இதனால் பாகிஸ்தானுக்கு உலக வங்கி சர்வதேச நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் நிதி உதவி கிடைக்கவில்லை.

கடந்த 2020 ஒக்டோபரில் எப்.ஏ.டி.எப். அமைப்பின் கூட்டம் நடைபெற்றது. அதில் பாகிஸ்தான் முக்கிய செயற்திட்டங்களை நிறைவேற்றாததால், "கிரே" நிறபட்டியலில் தொடரும்" என அறிவிக்கப்பட்டது. 2022 ஏப்ரல் மாதம் எப்.ஏ.டி.எப்., அமைப்பின் மாநாடு ஆரம்பிக்க உள்ளது.

இதில் பாகிஸ்தான் தனது செயற்றிட்டங்களை சரிவர நிறை வேற்றவில்லை என செய்திகள் வெளியாகியுள்ளதால், மீண்டும் "கிரே" பட்டியலில் தொடர வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. (7-4)

# வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எலிசபெத் மகாராணி



(லண்டன்)

பிரிட்டனின் 95 வயதான எலிசபெத் மகாராணி பல வருடங்களுக்கு பின்னர் முதல்முறையாக ஒரு இரவை வைத்தியசாலையில் கழித்துள்ளார்.

ஆரம்ப மருத்துவ பரிசோதனைகளுக்காக இலண்டனில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மகாராணி, கடந்த புதன்கிழமை இரவை வைத்தியசாலையில் கழித்துள்ளார்.

பின்னர் வியாழக்கிழமை மதிய உணவு நேரத்துக்கு பின்னர் வின்ட்சர் கோட்டைக்கு திரும்பியுள்ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

மகா ராணியின் இந்த மருத்துவப் பரிசோதனைகளினால் வடக்கு அயர்லாந்திற்கான புதன்கிழமை விஜயமும் இரத்து செய்யப்பட்டது.

2013 ஆம் ஆண்டுக்குப் பிறகு ராணி வைத்தியசாலையில் ஒரு இரவை கழித்தது இதுவே முதல் முறை.(7-4)

# ஒஸ்கார் விருதுக்கான போட்டியில் யோகிபாபுவின் 'மண்டேலா'

(டெல்லி)



உலகளவில் பிரபலமான ஒஸ்கார் விருது வழங்கும் விழா ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்காவில் நடத்தப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும், இந்திய அளவில் சிறந்த திரைப்படங்களைத் தேர்வு செய்து, அதிலிருந்து ஒரு படத்தை வேற்று மொழிக்கான ஒஸ்கார் விருதுக்கு இந்தியா சார்பில் பரிந்துரை செய்யப்படும்.

அந்த வகையில் இந்த ஆண்டு இந்தியா சார்பாக 14 படங்கள் போட்டி போடுகின்றன, அதில் மடோன் அஸ்வின் இயக்கத்தில் யோகி பாபு நடித்த 'மண்டேலா' படமும் உள்ளது.

அந்த போட்டியில் இடம் பெற்ற ஒரே தமிழ் படம் இது தான்.15 பேர் கொண்ட குழு இந்த 14 படங்களையும் பார்த்து, அதிலிருந்து ஒரு படத்தைத் தேர்வு செய்து இந்தியா சார்பில் ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரை செய்வர். அந்த ஒரு படம் 'மண்டேலா'-வாக இருக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். (7-4)

# தடுப்பூசி நன்கொடையில் அமெரிக்கா முதலிடம்

(வோஷிங்டன்)

வெளிநாடுகளுக்கு 20 கோடி "டோஸ்" கொரோனாத் தடுப்பூசியை அமெரிக்கா நன்கொடையாக வழங்கி உள்ளது.

இதன் வாயிலாக 100 இற்கும் மேற்பட்ட நாடுகள் பயனடைந்து உள்ளன. உலக அளவில் தடுப்பூசிகளை அதிகம் நன்கொடை அளிக்கும் நாடாக அமெரிக்கா உள்ளது.

இது குறித்து சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க அமைப்பின் அதிகாரி சமந்தா பவர் கூறியதாவது.

இந்த 20 கோடி தடுப்பூசி டோஸ்கள், இலட்சக்கணக்கான மக்களின் உடல் நலத்தை பாதுகாத்துள்ளதோடு, அவர்களுக்கு நம்பிக்கையும் அளித்துள்ளன.

நாங்கள் செய்ய வேண்டியவை இன்னும் நிறைய உள்ளன எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே, கொரோனாத் தடுப்பூசி, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஏழை நாடுகளுக்கு கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4)

# மர்ம நோய்த் தாக்கத்தால் 165 குழந்தைகள் உயிரிழப்பு

(கின்ஷாசா)

காங்கோ நாட்டில் உள்ள குவிலு மாகாணத்தில் மர்ம நோய் தாக்கியதில் கடந்த ஒகஸ்ட் மாதம் முதல் இது வரை 165 குழந்தைகள் உயிரிழந்துவிட்டன என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

மர்மநோய் தாக்கப்பட்ட குழந்தைகள் மலேரியாவுக்கான அறிகுறி மற்றும் இரத்த சோகை ஏற்படுத்தக் கூடிய பாதிப்புகளுடன் காணப்படுவதாக காங்கோ நாட்டின் பிராந்திய சுகாதாரத் துறைத் தலைவர் ஜீன்-பியர் பாசாக் தெரிவித்தார்.

மேலும் பெரும்பாலும் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளே அதிக அளவு பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் Iozo, Munene, Kinzamba ஆகிய கிராமங்களில் நாள் தோறும் 4 குழந்தைகள் உயிரிழப்பதாகவும் சுகாதாரத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (7-4)

# காட்டுத்தீயை ஏற்படுத்திய 24 பேருக்கு மரண தண்டனை

(டமாஸ்கஸ்)

சிரியாவில் உள்ள காட்டுப்பகுதியில் கடந்த ஆண்டு காட்டுத்தீ பரவியது.

இந்த காட்டுத்தீ 3 மாகாணங்களுக்கு பரவியது. பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட 187 காட்டுத்தீ சம்பவத்தில், 280 நகரங்கள் மற்றும் கிராமங்கள் பாதிக்கப்பட்டன.

காட்டுத்தீயால் 32 ஆயிரம் ஏக்கர் காட்டில் உள்ள விவசாய நிலம் அழிந்தது. மேலும் 370 வீடுகள் தீக்கிரையானது. இந்தக் காட்டுத்தீயால் 3 பேர் உயிரிழந்தனர்.

இதனைத் தொடர்ந்து காட்டுத்தீயை வேண்டுமென்றே தொடக்கிய 24 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 24 பேரும் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், குறித்த 24 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது. (7-4)

# வன்முறை சம்பவங்களுக்கு எதிராக வட்டுக்கோட்டை மக்கள் ஆர்ப்பாட்டம்

(அராலி)

**வட்டுக்கோட்டை பகுதி மக்கள் நேற்றையதினம் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக பொங்கியெழுந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**



அண்மையில், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முதலியார் கோவில் பகுதியில் இடம்பெற்ற வன்முறை சம்பவத்தில், அப்பகுதியைச் சேர்ந்த இருவர் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்த நிலையில் ஒருவரது அவயம் துண்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் தாக்குதலை மேற்கொண்ட பக்கத்தினைச் சேர்ந்த இருவரை மட்டும் கைது செய்யப்பட்டு, மல்லாகம் நீதிமன்ற நீதவான் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அண்மையில் விடுதலை செய்யப்பட்டார். ஆகவே தாக்குதல் நடத்திய மிகுதிப்பேரையும் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறுகோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் துணைவிமைதானத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் குணதிலக தெரிவிக்கையில், மக்களது அமைதி வழியிலான பேரணிக்கு நாங்கள் எந்த விதத்திலும் இடையூறு செய்யப்போவதில்லை. நீங்கள் தாராளமாக உங்களது போராட்டத்தினை முன்னெடுக்கலாம். நாங்கள் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய வன்முறையாளர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டவாறே இருக்கின்றோம்.

ஆனால் இச் சம்பவத்துடன் தொடர்புடைய வன்முறையாளர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்கள் அனைவரும் மறைந்துள்ளார்கள். அவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் நாங்கள். தீவிரமாகத் தான் உள்ளோம் என மேலும் தெரிவித்தார். (4-7-104)

# தடுப்பூசி பெறாதவர்களுக்கு மன்னாரில் நேற்று தடுப்பூசி



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இதுவரை கொரோனாத்தடுப்பூசிகளை பெறாத நபர்கள் மற்றும் கடந்த மாதம் முதல் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்றைய தினம் மன்னார் எழுத்தூர் பாடசாலையில் இடம்பெற்றது.

மேலும் இதுவரை மன்னார் மாவட்டத்தில் 83 வீத மானவர்கள் கொரோனாத் தடுப்பூசிகளில் இரண்டு டோஸ்களையும் 68 வீதமானவர்கள் முதல் டோஸ் தடுப்பூசியையும் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4-285)

## அடாத்தாக பயிர்ச் செய்கை

### பொலிஸில் முறைப்பாடு

(அக்கராயன்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டக் காணியில் அடாத்தாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட நபர்கள் தொடர்பாக கரைச்சி பிரதேச செயலாளரிடமும் அக்கராயன் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரும்புத் தோட்டக் காணி அண்மையில் பொதுமக்களின் பயிர்ச் செய்கைக்காக 196 ஏக்கர் விடுவிக்கப்பட்ட நிலையில் சில நபர்கள் அடாத்தாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளதாக பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(7-4-350)



-இவ்வருடம் க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு முதல் தடவை மற்றும் 2 ஆவது தடவையாக தோற்றும் மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசியான பைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. வடமாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:- ஜோசப்நயன், சப்தசங்கரி, சதீஸ்,தேவானந்தன்,வசந்தரூபன்)

## கஞ்சா உடைமையில் வைத்திருந்தவர் கைது

(தருமபுரம்)

அக்கராயன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைவிழுந்தான் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியவர் ஒருவரை அக்கராயான் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் சோதனையிட்ட பொழுது 15 கிராம் கஞ்சாவினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அவரை கைது செய்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அக்கராயன் பொலிஸார் தெரிவித்தனர். (7-4-316)

# பண்பாடு கண்ட உன்னத ஆளுமை சைவப்புலவர் செல்லத்துரை

## பேராசிரியர் சண்முகலிங்கன் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

எங்கள் பண்பாடு கண்ட உன்னத ஆளுமையான சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆசிரியரின் பிரிவு செய்திகேட்டு நெஞ்சில் எழுதும் துயரம் கனமானது என முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தனது இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் மூலவராய் விளங்கிய எங்கள் பண்பாட்டின் பெருஞானப்பக்குவமாகவும் விளங்கிய அவரின் பேராளுமை ஈடில்லாதது.

அவரோடு பழகக்கிடைத்த பொழுதுகளின் மேன்மை நிகரில்லாதது. அவரின் உள்ளக் கமலத்தைப் பிரதிபலித்த வெள்ளை நிற ஆடை உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் தொடர்பியல் வல்லமை எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை. தமிழ்ப்பண்பாட்டின் இலக்கணமாகவும் இலக்கியமாகவும் விளங்கிய பேராளுமையான அவரின் மேலான நினைவுகளுடன் காத்திருப்போம் என மேலும் தெரிவித்தார். (7-4)

# வீதியை புனரமைத்து போக்குவரத்தை ஆரம்பியுங்கள்

## முக்கொம்பன் மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சிஸ்கந்தபுரத்தில் இருந்து முக்கொம்பன் கிராமத்திற்கு இடையிலான வீதியினைப் புனரமைத்து பேருந்து சேவையினை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி ஸ்கந்தபுரம் மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்கந்தபுரத்தில் இருந்து முக்கொம்பன் செல்லும் வீதி மிக மோசமாக மாறியதன் காரணமாக பேருந்து சேவைகள் மூன்று மாதங்களுக்கு மேலாக நடை பெறவில்லை. இதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முக்கொம்பன் கிராம மக்கள் போக்குவரத்து வசதி இல்லாமல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். குறித்த வீதியினைப் புனரமைத்து போக்குவரத்துக்கு உதவும்படி கோரிக்கை விடுத்தனர். குறித்த கோரிக்கைக்கு இணங்கி ஸ்கந்தபுரம் முக்கொம்பன் வீதியினை விரைவாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் மக்களிடம் தெரிவித்தார். (7-4-350)

# கால்நடை அட்டகாசத்தால் நெற் செய்கை பாதிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனிக் குளத்தின் கீழ் காலபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ள நிலையில் நெற் பயிர்களை கால்நடைகள் நாசம் செய்து வருவதாகவும் விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனிக் குளத்திற்கான மேய்ச்சல் தரவைகள் இனங் காணப்படாததன் காரணமாக வயல் நிலங்களுக்குள் கால் நடைகள் வருகை தருவதாகவும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இறுக்கமான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது தொடர்பாக முயற்சிகளை மேற்கொள்ளுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதனைவிட வவுனிக் குளத்தில் கால்நடைகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதன் காரணமாக கால்நடைகளை விற்பனை செய்வதற்கான அனுமதிகளையும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் தற்போது கால்நடைகளின் தொல்லை மேலும் அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (7-4-350)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2021-16.11.2021



**செய்யும் காரியங்கள் அனைத்திலும் முத்திரை பதிக்கும் தனுசு இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் தன ஸ்தானத்தில் நீசம் பெற்று சஞ்சரிக்கிறார். அவர் பலம் பெற்ற சனியோடு சேர்ந்து 'நீச்ச பங்க ராஜயோகம்' அடைகிறார். எனவே தொழில் வளர்ச்சியில் இருந்த தடைகள் அகலும்.

**துலாம் - செவ்வாய் சஞ்சாரம்**

ஐப்பசி 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் வேளையில் விரயத்திற்கேற்ற லாபம் வந்துசேரும். பிள்ளைகள் வழியில் எடுத்த முயற்சி கைகூடும். ஆடை - ஆபரண சேர்க்கை உண்டு.

**சனி - செவ்வாய் பார்வை**

ஐப்பசி 7 ஆம் திகதி முதல், துலாத்தில் உள்ள செவ்வாயை, மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். பஞ்சமாதிபதி செவ்வாயை, சனி பார்ப்பது நல்லதல்ல. கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. குடும்பத்திலும் சரி, வெளி வட்டாரத்திலும் சரி பிரச்சினைகள் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு கடன் சுமை கூடும். செவ்வாய் பெயர்ச்சியாகும் வரை பொறுமையை கடைப்பிடியுங்கள்.

வதால் கல்வி சம்பந்தமான முயற்சி கைகூடும். உங்களுக்கு ஏழரைச் சனி நடப்பதால் சுய ஜாதகத்தை ஆராய்ந்து முடிவெடுப்பது நல்லது.




**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 14 ஆம் திகதி, தனுசு இரா

திகதி, குரு பகவான் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அதன்பிறகு மங்கல காரியங்கள் இல்லத்தில் நடைபெற வழிபிறக்கும். தந்தை வழியில் ஆதரவு கூடும். பூர்வீக சொத்துக்களை விற்று விட்டு புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். தொழில் வளர்ச்சி உண்டு.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் இராசிநாதன் குரு நீச்சம் பெறுவதால், எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டும். குடும்பப் பிரச்சினை

# தொழில் வளர்ச்சியில் இருந்த தடைகள் அகலும்

**பொன்னான புதன் பெயர்ச்சி**

ஐப்பசி 13 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது தொழிலில் எதிர்பார்த்தபடியே இலாபம் கிடைக்கும். சூரியனோடு புதன் இணைந்து 'புத - ஆதித்ய யோக 'த்தை உருவாக்கு

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

சிக்கு சுக்கிரன் செல்கிறார். 6, 11இற்கு அதிபதி ஜென்மத்தில் சஞ்சரிக்கும் போது, விரயங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மாற்றங்கள் வரலாம். ஒரு சிலர் சுயதொழில் தொடங்க முன்வருவர். உடன்பிறப்புகளுக்குள் பிரச்சினை உருவாகலாம்.

**கும்ப - குரு சஞ்சாரம்**

ஐப்பசி 27 ஆம்

அதிகரிக்கும். கணவன் -மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். வரவும்-செலவும் சமமாகும். பணிபுரியும் இடத்தில் கவனமாக இருங்கள். பொறுப்பை மற்றவர்களிடம் ஒப்படைப்பதால் பிரச்சினைகள் வரலாம். இம் மாதம் சனிக்கிழமைகளில் சனி பகவானை வழிபடுங்கள்.



**எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொண்டு ஏமாற்றத்தை தவிர்க்கும் மகர இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி உங்கள் இராசியிலேயே இருக்கிறார். அவரோடு விரயாதிபதி குரு நீச்சம் பெற்றிருப்பதால் 'நீச்ச பங்க ராஜயோகம்' செயல்படுகிறது. எனவே இம்மாதம் வருமானம் சீராகும். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் எதையும் யோசித்துச் செய்வது நல்லது.

**துலாம் - செவ்வாய் சஞ்சாரம்**

ஐப்பசி 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் செல்கிறார்.

உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பூமி சம்பந்தப்பட்ட வகையில் இலாபம் கிடைக்கும். எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் பலன் உண்டு.

**சனி - செவ்வாய் பார்வை**

ஐப்பசி 7 ஆம் திகதி முதல், துலாத்தில் உள்ள செவ்வாயை, மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். எனவே பங்குதாரர்களால் தொழிலில் தொல்லைகள் ஏற்படலாம்.

உத்தியோகஸ்தர்களுக்கு, திறமைக்கேற்ற அங்கீகாரம் கிடைக்காது. உதவுவதாக சொன்ன நண்பர்கள், கடைசி நேரத்தில் கைவிரிப்பார்கள். வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் உருவாகும்.

முன்னேற்றம் உருவாகும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். பணிபுரியும் இடத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும். பிள்ளைகளுக்கு நல்ல சம்பளத்தில் வேலை கிடைக்கும்.




**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 14 ஆம் திகதி, தனுசு இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். இந்த கால கட்டத்தில் வரவும் -செலவும் சமமாகும். ஆடை - ஆபரண சேர்க்கை உண்டு. கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். பிள்ளைகளால் பெருமை

சஞ்சரிக்கப் போவதால் விரயத்திற்கேற்ற வருமானம் வந்து சேரும். கூட்டுத் தொழிலில் இருந்து விலகி, தனித்து இயங்க முயற்சிப்பீர்கள். சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரம் இது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் 'நீச்ச பங்க இராஜ யோகம்' பெற்ற குருவின் ஆதிக்கத்தால் வருமானம் போதுமானதாக இருக்கும்.

கணவன் - மனைவி இருவரும், ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட்டால் குடும்பத்தில் அமைதி நிலவும்.

பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். சங்கிலித் தொடர்போல வந்த கடன் சுமை குறையும்.

# எதையும் யோசித்துச் செய்வது நல்லது

**பொன்னான புதன் பெயர்ச்சி**

ஐப்பசி 13 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழிலில்

யுண்டு. பிள்ளைகள் தொடர்பாக எடுத்த முயற்சிகள் வெற்றியாகும்.

**கும்ப - குரு சஞ்சாரம்**

ஐப்பசி 27 ஆம் திகதி, குரு பகவான் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். விரயாதிபதி குரு, தன ஸ்தானத்தில்

பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். பதவி உயர்வு கிடைப்பதற்கான அறிகுறி தென்படும்.

இம்மாதம் சனிக்கிழமைகளில் பெருமாளை வழிபாடு செய்யுங்கள்.

(தொடரும்...)

## இலங்கைக்கு

# 2.5 மில்லியன் நிதியுதவி வழங்க அமெரிக்கா முடிவு

(கொழும்பு)

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் ஊடாக, இலங்கையில் அவசர கொவிட்-19 உதவிக்காக மேலதிகமாக 2.5 மில்லியன் டெலர்களை வழங்கவுள்ளது.இந்தத் தகவலை கொழும்பில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகம் உறுதிபடுத்தியுள்ளது.

இந்த உதவியானது பாதுகாப்பான மற்றும் பயனுறுதியுள்ள கொவிட்-19 தடுப்பூசியேற்றல்களுக்கான சமமான அணுகலைத் துரிதப்படுத்தும் மற்றும் கொவிட்-19 இனை எதிர்கொள்வதற்கான சுகாதாரப் பணியாளர்களின் திறனை வலுப்படுத்துமென, இல்ங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளது. (நி-5)

# நடத்துனர்களின்றி போக்குவரத்தை முன்னெடுக்க யோசனை முன்வைப்பு

(கொழும்பு)

பேருந்து நடத்துனர் இன்றி பயணிகள் போக்குவரத்திற்காகப் பேருந்துகளைப் பயன்படுத்தக்கூடிய வகையில் மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தைத் திருத்துமாறு இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் போக்குவரத்து அமைச்சுக்கு யோசனை முன்வைத்துள்ளது.

இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனைத் தெரிவித்தார்.

கொவிட்-19 காரணமாகப் பேருந்து தொழில்துறையின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதோடு பணியாளர்களின் வெற்றிடம் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# தொழிலுக்காக வெளிநாடு செல்வதில் சிக்கல் காணப்பட்டால் 1989 ஐ அழையுங்கள்

(கொழும்பு)

தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் இடைத்தரகர்களிடம் சிக்காமல், தங்களது செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் கோரியுள்ளது.வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம்குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான நேரடி அணுகல்களை அதன் கட்டுப்பாட்டின்கீழ் உரிமம் பெற்ற தரப்பினரிடமிருந்து மாத்திரம் பெற்றுக் கொள்ளுமாறு அந்தப் பணியகம் அறிவுறுத்தியுள்ளது.

இதுபோன்ற உரிமம் பெற்ற 800 முகவர்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்வதில் ஏதேனும் சிக்கல் நிலை காணப்படுமாயின் 24 மணிநேரமும் செயற்படக்கூடிய வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் 1989 என்ற இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-5)

# போதியளவு எரிபொருள் கையிருப்பில்

## கம்மன்பில

(கொழும்பு)

“நாட்டில் எரிபொருளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை. வதந்திகளை நம்பியே மக்கள் வரிசையில் காத்திருந்தனர் ” என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-“வழமை போன்றே இம்முறையும் எரிபொருள் இருப்பு தொடர்பில் சிலர் வதந்தியைப் பரப்பினர். இதனை நம்பி மக்கள், தமது வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பி கொள்வதற்கு முற்பட்டனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒன்றரை நாளுக்குத் தேவையான இருப்பே இருக்கும். அதிக கேள்வி ஏற்பட்டதால் தான் தட்டுப்பாட்டு நிலைமை உருவாகியது.நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது. ஜனவரி மாதம் வரை தொடர்ச்சியாக விநியோகிக்கக் கூடிய வகையில் இருப்பு கைவசம் உள்ளது” என அவர் தெரிவித்தார். (நி-5)

## பிரசன்ன குணசேன இராஜினாமா?



(கொழும்பு)

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மருத்துவர் பிரசன்ன குணசேன ஜனாதிபதியிடம் இராஜினாமாக் கடிதத்தை ஒப்படைத்துள்ளதாகவும் அவரது கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டாரா? இல்லையா? என்பது இன்னும் தெரியவில்லை என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளன.

மேலும் உடல்நலக் குறைவு மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவர் பிரசன்ன குணசேன ஒரு புகழ்பெற்ற நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் ஆவார். அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகக் கடந்த சில மாதங்களாக இலங்கைக்கு கொரோனாத் தடுப்பூசிகளை வாங்குவதற்கு ஒரு முன்னணி சேவையை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(நி-5)

# இன்று ஒரு தகவல்

## உத்தியோகம் கசக்கிறதா?

நான் அறிந்தவரையில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தாங்கள் செய்து கொண்டிருக்கும் உத்தியோகங்களில் உள்ள குறைகளைப் பூதக் கண்ணாடி கொண்டு பார்க்கிறார்கள். எனவே உத்தியோகத்தில் கசக்கத் தான் செய்யும்.

அதோடு தாங்கள் செய்யும் உத்தியோகம் தங்களுக்கு மன நிறைவையோ பொருளாதார உயர்வையோ தரவில்லை என்றும், வேறொரு நல்ல வேலையை தேடிக் கொண்டிருப்பதாகவும் சொல்வார்கள். அந்த வேலை கிடைத்தாலும் அது அவர்களுக்கு அக்கரைப் பச்சையாகத் தான் இருக்கும்.

அதாவது இத்தகைய மனப்போக்கு உள்ளவர்களுக்கு கவர்னர் பதவி கூட கசக்கத் தான் செய்யும்.

எனவே உள்ள உத்தியோகத்திலேயே மன நிறைவைக் காணுவதே புத்திசாலித்தனமான செயலாகும்.

இந்த வேலையில் சேரும் முன், இந்த வேலை எனக்கு கிடைத்து விட்டால் போதும். என் வாழ் நாள் முழுவதையும் நிம்மதியாகக் கழித்த விடுவேன் என்று பலரிடம் சொன்னோமே, அதே ஆர்வத்தை இன்றைக்கும் காப்பாற்றிக் கொள்ள முயலவேண்டும்.

முதல் காரியமாக முதலாளியிடம் அல்லது நிறுவனத்திடம் நன்றி விசுவாசத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். தாமும் தம் குடும்பமும் உண்ணும் ஒவ்வொரு கவளச் சோற்றுக்கும் காரணமாக விளங்கும் அந்த முதலாளியை, நிறுவனத்தை, மதியாதிருந்தால் எப்படி?

உரிய நேரத்தில் அலுவலகத்திற்கு வந்து விட வேண்டும்.உடன் பணி புரிபவர்களைப் பாராட்ட வேண்டும். அவர்களுடன் நல்லுறவு வைத்துக் கொள்வதில் அக்கறை காட்ட வேண்டும். கூடப்பணிபுரிபவர்களைப் பகைத்துக் கொண்டாலும் உத்தியோகம் கசக்கும்.

வீட்டுக்குக் கவலைகளையும் மூடுகளையும் ஒதுக்கித் தள்ளுங்கள்.மற்றவர்களோடு சேர்ந்து சிரியுங்கள். மற்றவர்களைப் பார்த்துச் சிரிக்காதீர்கள்.

உங்களைப் பற்றிய கமண்டுகளை ஸ்போர்டிவ் ஆக எடுத்துக் கொள்ளுங்கள்.

ஐந்துமணி ஆகிவிட்டால் ஏதோ நீங்கள் பணிபுரியும் கட்டடமே பற்றிக் கொண்டு விட்டது போல் பறக்காதீர்கள். கடிகாரத்தையே பார்ப்பவர்கள் உத்தியோக உயர்வினைக் காணமுடியாது.உங்களிடம் ஒப்படைக்கப்படும் பணிகளைப் பொறுப்புடனும் விரைவாகவும் முடியுங்கள்.

உங்கள் பணி முன்னதாக முடிந்து விட்டால் உடன் பணிபுரிபவர்களுக்கு உதவ முடியுமா? என்று பாருங்கள்.

தவறு இருந்தால் ஒப்புக்கொள்ளுங்கள், காரணம் கூறாதீர்கள்.சுருக்கமாகக் கூறப் போனால், அலுவலகத்தில் முக்கிய மனிதர் என்ற பெயரைத் தட்டிக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

பதவி உயர்வும் சம்பள உயர்வும் உங்களைத்தேடிவரும்.

உத்தியோகம்– உற்சாகமாக இருக்கும்!

**லேனா தமிழ்வாணன்**




## காகமும் எலியும்



அவர்களது சண்டையைப் பாம்பு ஒன்று பார்த்துக் கொண்டிருந்தது. அது அவர்கள் சண்டையில் தனக்கு ஏதாவது ஆதாயம் கிட்டும் என நம்பியது.

அவர்களிடம் சென்ற அந்தப் பாம்பு, தான் மத்தியஸ்தம் செய்வதாக வாக்களித்தது.

இருவரது யோசனையும், இருவரது உழைப்பும் இணைந்ததால் தான் இவ்வளவு நெல் மணிகளையும் சேகரிக்க முடிந்தது என்பதை விளக்கிக் கூறியது.

பாம்பின் வாக்கு சாமர்த்தியத்தில் காகமும் எலியும் மயங்கின.

இருவருக்குமே சம அளவில் தானியங்களைத் தானே பிரித்துத் தருவதாகக் கூறியது. சொன்னபடியே பாம்பும் இருவருக்கும் தானியங்களைச் சம அளவில் பகிர்ந்து கொடுத்தது. இதனால் காகமும் பாம்பும் மிகுந்த மகிழ்ச்சியடைந்ததுடன், பாம்பின் மீது நன்றியுடையனவாகவும் விளங்கின.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பாம்பின் மீது மிகுந்த நம்பிக்கையும் கொண்டன.

காகமும் எலியும் வேலை செய்த களைப்பு தீர ஓய்வெடுக்க விரும்பின. இந்தச் சந்தர்ப்பத்தைப் பாம்பு பயன்படுத்திக் கொள்ள விரும்பியது.

"நண்பர்களே நீங்கள் மிகவும் களைத்திருக்கிறீர்கள். இங்கே படுத்துச் சற்று ஓய்வெடுங்கள். வேறு விலங்குகள் உங்கள் தானியங்களை களவாடிச் செல்லாமல் காவலும் இருங்கள் நான் கொஞ்சம் கொஞ்சமாக இருவரது வீடுகளிலும் இந்தத் தானியங்களைக் கொண்டு சேர்க்கிறேன்". (தொடரும்)

# மகாபாரதம்




இனி அந்த நாட்கள் வருமா? கணவனுக்கு இணையான தெய்வமும் இல்லை.. அன்பரே நீர் இன்றி நான் வாழப்போவதில்லை.

கற்பிற் சிறந்த எந்தப் பெண் தன் கணவனை இழந்த பின் உயிர் வாழ்வாள்?" எனக் கூறிக் கொண்டே ஆண் புறா வீழ்ந்த தீயில் தானும் வீழ்ந்து உயிர் நீத்தது.

என்ன வியப்பு!!!

அழகான ஆடை அணிகலங்களை அணிந்ததும், மேலோரால் புகழப்படுவதும் விமானத்திலேறிச் சுவர்க்கம் செல்வதுமான தனது கணவனை அப் பெண் புறா அடைந்து சுவர்க்க இன்பத்துடன் வாழ்ந்து வந்தது.

சுவர்க்க பூமியில் மகிழ்வுடன் செல்லும் இரு புறாக்களையும் கண்ட வேடன் மனமாற்றம் அடைந்தான்.

தானும் தவத்தை மேற்கொண்டு அந்தப் பறவைகளைப் போல சுவர்க்கம் செல்ல வேண்டும் என உறுதிகொண்டு, தன் தொழிலை விட்டான். விரதங்களை மேற்கொண்டான்.

ஒருநாள் செல்லும் வழியில் அழகான குளத்தைக் கண்டான். அக்குளத்தில் நீர் நிறைந்திருந்தது. பறவைகளின் ஒலி எங்கும் ஒலித்துக் காதுக்கு இனிமையாக இருந்தது.

வேடனுக்கு தாகம் இருந்த போதும் குளத்தை நாடவில்லை.

கொடிய விலங்குகள் வாழும் காட்டை நோக்கி நடந்தான். அப்போது பெருங்காற்று வீசியது.

மரங்கள் ஒன்றோடொன்று உராய்ந்தன. தீப்பொறி கிளம்பிக் காடே தீப்பற்றி எரிந்தது. விலங்குகள் அஞ்சி ஓடின.

ஆயினும் அந்த ஆபத்தினின்றும் தப்பிச் செல்ல வேண்டும் என வேடன் கருத வில்லை. தீயில் எரிந்து பாவத்தைத் தொலைத்துச் சுவர்க்கம் அடைந்தான்.

தருமா நற்செயலால் ஆண் புறாவும், பெண் புறாவும் சுவர்க்கம் அடைந்தன.

தவற்றினைத் திருத்திக் கொண்டு நல்லொழுக்கத்துடன் வாழ்ந்த வேடனும் சுவர்க்கம் அடைந்தான். ஆகவே நல்லொழுக்கம் மேற்கொள்க" என்றார்.

(தொடரும்)

அநேகர் தங்கள் காலத்தின் பெரும் பாகத்தைப் பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர்.
~ லா புரூயர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் தரப்புக்களால் எமக்கு விடிவு ஏற்படமாட்டாது

நாடு கந்தறுந்து காவடி எடுத்தாலும் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எந்தப் பஞ்சமும் இல்லை என்பதுதான் உண்மை.

தமக்கு இருக்கக்கூடிய ஆட்சிப் பலத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி எவ்வாறெல்லாம் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயலாற்ற முடியுமோ அவற்றையெல்லாம் செய்வதில் ஆட்சியாளர்களும் சிங்களப் பேரினவாதிகளும் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

குறிப்பாக, இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதை நிரூபிப்பதற்காக இந்த நாட்டின் ஆதிக்குடிகளான தமிழ் மக்களின் தொல்லியல் சான்றாதாரங்களை அழிப்பதில் தீவிரமாக இருக்கக்கூடிய ஆட்சித் தரப்பினர், வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் பௌத்த விகாரைகள் இருந்ததாகக்கூறி புதிய விகாரைகளை அமைப்பதிலும் வேகமாகச் செயற்படுகின்றனர்.

இதற்கு மேலாக, வடக்கு கிழக்கு உள்ளிட்ட தமிழர் தாயகத்தை சிதைக்கும் வகையில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதிலும் படைத் தரப்பினரை இங்கு குவிப்பதிலும் காட்டப்படும் கருசனை அனைத்தும் எம் தமிழ் இனத்துக்கு எதிரானதென்பது மறுதலிக்க முடியாத உண்மை.

தமிழ் மக்களை தொடர்ச்சியாக வஞ்சித்து வருகின்ற சிங்கள ஆட்சியாளர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை, மாகாண சபை தொடர்பான அரசியலமைப்புத் திருத்தங்களைக் கொண்டு வந்து அதனூடு வடக்கு கிழக்கில் தமிழர்களின் தனித்துவங்களை மழுங்கடிக்கின்ற நிகழ்ச்சித் திட்டம் அரங்கேறப் போகிறது.

இவ்வாறு சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் இனத்துக்கு எதிராக மேற்கொண்டுவரும் கொடுஞ் செயல்கள் வெளிப்படையாகத் தெரிகின்றபோதிலும் அது தொடர்பில் தமிழ் அரசியல் தரப்புகளால் எதுவும் செய்ய முடியவில்லை.

இவ்வாறு தமிழ் அரசியல் தரப்புகளால் எதுவும் செய்ய முடியாதமைக்குக் காரணம் அவர்களிடம் ஒற்றுமையில்லை என்பது தான் உண்மை.

தமிழ்த் தரப்புகளிடம் ஒற்றுமை இல்லை என்பதற்கு அப்பால், தமிழ் அரசியல் கட்சிகளுக்குள்ளேயே குத்து வெட்டுக்களும் குழறுபடிகளும் நடக்கின்றபோது, தமிழ் அரசியல் தரப்புகளிடையேயான ஒற்றுமை பற்றிக் கதைப்பது வேடிக்கையானதாகவே தெரிகிறது.

ஆம், பாராளுமன்றத்துக்குச் சென்று சலுகைகளை அனுபவிப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டும் உரியதல்ல. ஏனைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களதும் பங்களிப்பும் அதுதான் என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது.

தவிர, ஒரு சொல்லைக் குறித்துவிட்டு, அதுபற்றி விவாதிப்பதிலேயே வாழ்நாள் முழுவதையும் செலவழிக்கக்கூடிய தமிழ் அரசியல் தரப்புகளால் தமிழ் மக்களுக்கு விடிவில்லை என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும்.

## கோவிட்டால் மேலும் 12 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கோவிட் தொற்றால் மேலும் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13,574 ஆக அதிகரித்துள்ளது.

உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 5 பெண்களும் 7 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம-3)

## காணி துப்புரவில் ஈடுபட்டவர் நிலத்தில் விழுந்து மரணம்

(அராலி)

யாழ். பண்டத்தரிப்பு பிரான்பற்று பகுதியில் திடீரென நிலத்தில் விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காணி ஒன்றில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தபோது குறித்த நபர் திடீரென விழுந்து உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டை இரண்டாம் ஒழுங்கையை சேர்ந்த 64 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சடலம் சங்கானை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டு அங்கு திடீர் மரண விசாரணை அதிகாரியின் விசாரணையின் பின் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ம-3,104)

## வடக்கில் மேலும் 15 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வட மாகாணத்தில் உயிரிழந்த மூதாட்டி உட்பட மேலும் 15 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 165 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 3 பேர், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேர், பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையில் 2 பேர், யாழ். போதனா வைத்தியசாலையில் 2 பேர், முழங்காவில் கடற்படை முகாமில் 2 பேர், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர் (உயிரிழந்த மூதாட்டி), காங்கேசன்துறை கடற்படை முகாமில் ஒருவர் என தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(ம-3)

## 2022 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு விவாதம்
### சைகை மொழியிலும் உரைபெயர்ப்பு

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு விவாதத்தை செவிப்புலனற்ற நபர்களுக்காக சைகை மொழியிலும் உரைபெயர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சபாநாயகரின் ஆலோசனைக்கு அமைய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் இவ்விடயம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், இதற்கமைய வரவு செலவுத் திட்ட விவாதம் நடைபெறும் காலப்பகுதியில் நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு சமாந்தரமாக சைகை மொழிக்குத் தனியானதொரு நேரத்தை வழங்குவதற்கும் இதன்போது அனுமதி வழங்கப்பட்டது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** செல்வமஹால் திரு மண மண்டபம், கொக்குவில் சந்தி, பூநாறி சந்தி, சிவப்பிரகாசம் வீதி, மருத்துவ பீட அரங்கம், பொக்ஸ் ரெஸ்ட் (பிறைவேற்) லிமிடெட், மருத்துவ பீடம், அச்சுகூடம் கே.கே.எஸ். வீதி, ஞானபண்டிதா பாடசாலை, மாவடி, திருநெல்வேலி, நந்தாவில், பிரம்படி கொக்குவில், சைலோ கோயில் வீதி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** வன்னி வைரம், பொன்னகர், பூசரசங்குளம், விநாயகபுரம், 682 ஆவது படைப் பிரிவு இராணுவப் படை முகாம், ஹைட்றா மணி, இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, கைவேலி (மருத்துவமனை), கேப்பாபுலவு வீதி, கோம்பாவில், கே.டி.கே. உணவகத்தடி, புதுக்குடியிருப்பு திறந்த பல்கலைக்கழகத்தடி, புதுக்குடியிருப்பு மருத்துவமனை, புதுக்குடியிருப்பு பொலிஸ்நிலையம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை, திம்பிலி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை- காத்தான் கோட்டம், குழுமாட்டுச் சந்தி, மறக்காறம்பளை- கணேசபுரம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும். (4-5)

## மருத்துவக் குறிப்பு

குடல்புண்ணுக்கு முட்டைக்கோஸ் சிறந்தது. முட்டைக்கோஸை வேக வைத்து அதன் நீரில் சிறிது மிளகை தட்டிப்போட்டு சூப்பாக சாப்பிட குடல்புண் சரியாகும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### விரிந்த உள்ளம் வேண்டும்

❖ நம் ஒவ்வொருவரிடமும் எல்லையற்ற ஆற்றலும், தூய்மையும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கின்றன.

❖ என்னால் முடியும் என்று நினைத்து செயலாற்றினால் அனைத்தையும் செய்து முடிப்பீர்கள்.

❖ மனிதனைப் பிணைத்திருக்கும் பந்தம் என்னும் கட்டுகள் அனைத்தும் கடவுளின் கருணையால் மட்டுமே அவிழும்.

❖ தூய்மையான நல்லெண்ணம் கொண்டவர்கள் இந்தப் பிறவியிலேயே கடவுளைக் காணும் பேறு பெறுவர்.

❖ உலகத்தைப் போல நம் உள்ளமும் பரந்து விரிந்ததாக இருக்கட்டும்.

❖ மனிதனை உருவாக்குவதில் இன்ப துன்பம் இரண்டும் சமமான இடத்தைப் பெறுகின்றன.

❖ தன்னைச் சரிபடுத்திக் கொண்டால் உலகையும் சரிப்படுத்தும் தகுதியைப் பெற முடியும்.

❖ இன்பத்தை விட துன்பமே சிறந்த ஆசானாக இருந்து நமக்கு வழிகாட்டுகிறது.

❖ மனித உயிர் தெய்வத்தன்மை கொண்டது. ஆனால், ஜடப்பொருளின் கட்டுக்குள் அகப்பட்டு கிடக்கிறது.

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

26



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

இதனிடையே, ஆப்கான் புதிய அரசு அமைவதில், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. அமைப்புக்கு தொடர்பு இருப்பதாக தகவல் வெளியாகியது. இந்த நிலையில் ஐ.எஸ்.ஐ அமைப்பின் இயக்குநர் பயஸ் ஹமீது, கடந்த வாரம் காபூல் பயணம் மேற்கொண்ட நிலையில், புதிய அரசின் அறிவிப்பு வெளியாகியிருந்தது.

ஆப்கானிஸ்தான் இடைக்கால அரசின் நிர்வாகிகளை தலிபான்கள் அறிவித்துள்ள நிலையில், அதை ஏற்க முடியாது என அந்நாட்டின் தேசிய எதிர்ப்பு முன்னணி தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்க்கது. இப்போது ஆப்கானிஸ்தானை தலிபான்கள் முழுமையாக ஆக்கிரமித்து விட்ட நிலையில், அந்தப் படையில் ஹைபத்துல்லா அகுன்சதா, முல்லா முகமது யாகூப், சிராஜுதீன் ஹக்கானி, முல்லா அப்துல் கானிபரதார், ஷேர் முகமது அப்பாஸ்ஸ்டானிக்சாய், அப்துல் ஹகீம் ஹக்கானி ஆகிய 6 பேரும் மிக முக்கியப் புள்ளிகளாகக் கருதப்படுகின்றனர்.

இதற்கிடையில், ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அமைக்கும் நிகழ்ச்சியில் 6 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அவை ஐக்கிய அமீரகம், பாகிஸ்தான், சவுதி அரேபியா, சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் ஆகும். இதில் பாகிஸ்தான், ஐக்கிய அமீரகம், சவுதி அரேபியா ஆகிய நாடுகள் தலிபான்கள் ஆட்சி நடத்திய 90 களிலே அவர்களுக்கு ஆதரவு அளித்தன. தற்போது தலிபான்கள் நட்புப்பட்டியலில் புதிதாக சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் சேர்ந்துள்ளன.

தலிபான் அமைப்பு பாகிஸ்தானில் இருந்து செயற்படுகிறது. தலிபான் அமைப்புக்கு தேவையான அனைத்து உதவிகளையும் பாகிஸ்தான் செய்து வருகிறது. ஹக்கானியின் குழு பாகிஸ்தானின் முழு ஆதரவோடு செயற்பட்டு வருகிறது. ஆப்கானில் புதிய அரசில் ஹக்கானி அமைப்புக்கு முக்கியத்துவம் தருவதற்கு, தலிபான்கள் தயங்குகின்றனர் என்று கூறப்படுகிறது. ஹக்கானி மற்றும் தலிபான்கள் இடையே



காபூலில் பாக்கிஸ்தான் எதிர்ப்புப் பேரணி 7, செப்டெம்பர் 2021

இதனால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு உள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்வதற்காகத்தான் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ., தலைவர் ஹமீத் பயஸ் காபூல் சென்றிருந்தார் என்றும் கூறப்பட்டது.

ஆப்கான் விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, காபூலில் உள்ள அந்நாட்டு தூதரகம் முன் செப்டெம்பர் 7 இல். போராட்டம் நடந்தது. இதில், ஏராளமான பெண்கள் உட்பட 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட நிலையில், அவர்களை கலைப்பதற்காக தலிபான்கள் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தகவல் வெளியாகியிருந்தது. இந்தச் சம்பவத்தை படம் பிடித்த பத்திரிகை நிருபரையும் தலிபான்கள் பிடித்து வைத்துள்ளதாக தெரிகிறது.

ஆப்கானில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் பெண்ணொருவர் ஆயுதம் ஏந்திய தலிபானை துணிச்சலுடன் எதிர்கொள்ளும் உணர்வுபூர்வமான படம் இணையத்தில் வெளியாகியிருந்தது.

தலிபான் ஒருவர் துப்பாக்கியை நீட்டுவதையும் அதனை பெண்ணொருவர் துணிச்சலுடன் எதிர்கொள்வதையும் காணபிக்கும் இந்தப் படத்தை ரொய்ட்டர் வெளியிட்டிருந்தது.

பெண்கள் மீதான கொடூரத்திற்கு பெயர் பெற்ற தலிபான்களுக்கு எதிராக முன்னெப்போதும் இல்லாத வகையில்

**- ஆர்ப்பாட்டத்தில் பெண்ணொருவர் ஆயுதம் ஏந்திய தலிபானை துணிச்சலுடன் எதிர்கொள்ளும் படம்**



ஆப்கானிஸ்தான் பெண் ஒருவர், தனது நெஞ்சுக்கு நேரே துப்பாக்கியை நீட்டும் தலிபானை அச்சமின்றி முகத்திற்கு நேரே எதிர்கொள்ளும் புகைப்படம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### 2021 செப்டெம்பர் 10 இடைக்கால அமைச்சரவையை ஏற்க முடியாதென கொழும்பில் உள்ள ஆப்கானிஸ்தான் தூதுவர்

ஆப்கானில் தலிபான்களால் அமைக்கப்பட்டிருக்கும் இடைக்கால அமைச்சரவையை ஏற்க முடியாதென கொழும்பில் உள்ள ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹய்தாரி செப்டெம்பர் 10இல் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் கடிதமொன்றை இலங்கை அரசாங்கத்திற்கும் அதேபோல கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அனுப்பியிருப்பதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

அத்துடன் உலகில் உள்ள ஆப்கான் தூதரகங்கள் எதுவும் இந்த இடைக்கால அமைச்சரவையை ஏற்றுக்கொள்ளாது என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இதேவேளை , ஆப்கானில் ஆட்சியமைத்துள்ள தலிபான்களின் ஆட்சியை இலங்கை அரசாங்கம் அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 2021-09-13 ஐ.நாவின் அவசரகால நிதி உதவி

ஆப்கானிஸ்தானில் போர் மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ ஐ.நாவின் மத்திய அவசரகால உதவி நிதியிலிருந்து 20 மில்லியன் டொலர் அளிக்கப்படும் என ஐ.நா. தெரிவித்துள்ளது. மேலும், அந்நாட்டுக்கு நிகழாண்டு மட்டும் 606 மில்லியன் டொலர் தேவை எனவும், உலக நாடுகள் அவற்றை வழங்க வேண்டுமெனவும் ஐ.நா. கோரிக்கை விடுத்துள்ளது.

ஓகஸ்ட் மாதத்தில் இஸ்லாமியவாத போராளிகள் ஆப்கானிஸ்தானின் கட்டுப்பாட்டை மீட்பதற்கு முன்பே, உள்நாட்டு மோதல் காரணமாக இந்த ஆண்டு 5,50,000க்கும் அதிகமான மக்கள் தங்களுடைய வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர் என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது. அதாவது, அந்நாட்டில் தற்போது 35 இலட்சம் பேர் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்துள்ளனர்.

ஆப்கானியர்களுக்கு உணவு, மருத்துவம், சுகாதார வசதிகள், சுத்தமான குடிநீர், சுகாதார வசதிகள் போன்றவை அத்தியாவசியமாக தேவைப்படுகிறது என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரஸ் தலைமையில் திங்கட்கிழமை (2021-09-13) நடைபெற்ற உயர்நிலை நன்கொடையாளர்கள் மாநாட்டில் இந்த வேண்டுகோளை ஐ.நா. முன்வைத்தது. "பல ஆண்டுகளாக பஞ்சம் மற்றும் வன்முறையை எதிர்கொண்டுள்ள மக்களை அண்மைக்கால நடவடிக்கைகள் மேலும் பாதிப்படையச் செய்துள்ளன. கடுமையான வறட்சியால் வரவிருக்கும் அறுவடையையும் பாதிக்கும் சூழல் உள்ளது. இந்த மாநாட்டில் திரட்டப்படும் நிதியின் பெரும் பங்கு ஐ.நா.வின் உலக உணவுத் திட்டத்துக்கு அளிக்கப்பட வேண்டும்" என ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நா. அகதிகள் முகமையின் தலைவர் ஃபிலிப்போ கிராண்டி காபூலுக்குச் சென்றுள்ளர். "நிகழாண்டு மட்டும் வீடுகளை இழந்து வெளியேறிய 5 லட்சம் பேர் உட்பட 35 லட்சம் பேரின் நிலைமை, அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகள் குறித்து ஆய்வு செய்ய உள்ளதாக சுட்டுரையில் அவர் தெரிவித்திருக்கிறார்.

### ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் புதிய உத்தரவு: ஆண்களும் பெண் களும் சேர்ந்து படிப்பதைத் தடுக்க புதிய நடைமுறை

ஆப்கான் பல்கலைக்கழகங்களில் ஆண்களையும் பெண்களையும் பிரித்து வைக்கும் முறையும், புதிய இஸ்லாமிய ஆடைக் குறியீடும் அறிமுகப் படுத்தப்படும் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர். "பெண்கள் படிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் ஆண்களுடன் அல்ல" என்று கூறினார் உயர்கல்வித்துறை அமைச்சர் அப்துல் பாக்கி ஹக்கானி. எந்தெந்தப் பாடங்களை கற்பிக்க வேண்டும் என்பது பற்றிய அறிவிப்பையும் அவர் வெளியிட்டார். 1996 மற்றும் 2001க்கு இடையில் தலிபான் ஆட்சியின் கீழ் பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் பெண்களுக்குத் தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### 2021-09-14 தலிபான்கள் ஆட்சிக்கு பாகிஸ்தான் ஆதரவு:

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி அமைந்துள்ள நிலையில் அதற்கு ஆதரவு உண்டா என்ற கேள்விக்கு அமெரிக்காவுக்கான பாக்இ தூதர் அசத் மஜீத் கான் விளக்கமளித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் கடந்த ஓகஸ்ட் 15 ஆம் திகதி தலிபான்களின் ஆட்சி அமைந்தது. அங்கே தற்போது முறைப்படி பிரதமர், துணைப் பிரதமர் அறிவிக்கப்பட்டுள்ளனர். ஆப்கானின் அண்டை நாடான பாகிஸ்தான் தலிபான்களுக்கு எவ்விதமான ஆதரவை நல்கும் என்ற கேள்வி இருந்து கொண்டே இருக் கிறது. இந்நிலையில் அமெரிக்காவுக்கான பாக்.தூதர் அசத் மஜீத்கான் அளித்த பேட்டியில் இது தொடர்பாக விரிவாகப் பேசியுள்ளார். அவர் கூறியதாவது: தலிபான்கள் மனித உரிமை மதிக்கப்படும் என்று உறுதியளித்துள்ளனர். அவர்கள் சர்வதேச நாடுகளுக்கு அளித்த வாக்கினைக் காப்பாற்ற வேண்டும். தலிபான்கள் மனித உரிமையைப் பேண வேண்டும், பெண்கள் உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இப்போதைக்கு ஆப்கானிஸ்தான் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடியைச் சந்தித்துள்ளது. அதனை சீர்செய்ய வேண்டும். சர்வதேச சமூகம் இந்த வேளையில் ஆப்கானிஸ்தானுடன் எப்படி இணைந்து மனிதாபிமான நெருக்கடியை சமாளிக்கலாம் என்றே யோசிக்க வேண்டும்.

ஆதரவு அளிப்பது, புறக்கணிப்பது எல்லாம் அப்புறம் யோசிக்க வேண்டியவை. ஆப்கானிஸ்தானில் குழப்பங்களுக்கு முற்றுப் புள்ளிவர வேண்டும் என்றே அமெரிக்கா விரும்புகிறது. அதையே தான் நாங்களும் விரும்புகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

(முற்றும்)

# எரிபொருள் தட்டுப்பாடு நாட்டில் விரைவில் ஏற்படும்

## எரிபொருள் தேசிய சங்கம்

(கொழும்பு)

நவம்பர் மாதம் 11ஆம் திகதி வரை பயன்படுத்தக் கூடியளவில் மாத்திரமே மசகு எண்ணெய் காணப்படுகிறது என எரிபொருள் தேசிய சங்கத்தின் பிரதி இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நவம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை பயன்படுத்தக்கூடியளவில் மாத்திரமே மசகு எண்ணெய் காணப்படுகிறது.

ஆனால் டிசம்பர் 14 ஆம் திகதியே மசகு எண்ணெய் கப்பல் நாட்டை வந்தடையும். இதன் காரணமாக தற்போது மிகக் குறைந்தளவிலேயே எண்ணெய் சுத்திகரிப்பு செயற்பாடுகள் இடம்பெறுவதாக எரிபொருள் தேசிய சங்கத்தின் பிரதி இணைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் பாரதூரமான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் எனவும், எனவே இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தொடர்ச்சியாக வலியுறுத்தினோம்.

எனினும் தொழிற்சங்கங்கள் பொய் கூறுவதாகவும், நாட்டில் போதுமானளவு எரிபொருள் காணப்படுவதாகவும், எரிபொருள் தட்டுப்பாடு காணப்படுமானால் அதனை நான் மறைக்கப் போவதில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வடக்கு, கிழக்கில்...

காணப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மாவட்டங்கள் உள்ளிட்ட 16 மாவட்ட மக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் 16 மாவட்டங்களில் பலத்த மின்னல் தாக்கம் ஏற்படும் அபாயம் உள்ளதென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய, மத்திய, சப்ரகமுவ, ஊவா, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாண மக்கள் போன்று குருநாகல், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட மக்களும் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (ம-3)

## நவம்பர் 1 முதல்...

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக சுகாதார ஊழியர்கள், முப்படையினர், பொலிஸார், சுற்றுலாத் துறையினர் மற்றும் ஏனைய முன்களப் பணியாளர்களுக்கு இவ்வாறு தடுப்பூசி பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-3)

## கல்வி நடவடி...

தாலோசித்து இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

கொரோனா தடுப்பு விசேட குழுவுடன் காணொளி தொழில் நுட்பத்தினூடாக நேற்று பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இந்த தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரத்தியேக வகுப்புகளை ஆரம்பிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## அனைத்து...

பிக்க சுகாதார அமைச்சினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அனுமதி பெறப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

அதன்படி, 200க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட தரம் 1 முதல் 5ஆம் தரம் வரையான ஆரம்ப பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தொடங்கும் என்று அவர் குறிப்பிட்டார். (ம-3)

## விவசாயி...

நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் பாராளுமன்றம் கூடியது.

மனுக்கள் சமர்ப்பிப்பு மற்றும் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின்னர் விவசாயிகள் எதிர்கொண்டுள்ள உரப் பிரச்சினைக்கு தீர்வு கோரி எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கையில் பதாதைகளை ஏந்தி எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

மேலும் அரசுக்கு எதிராக கோசங்களை எழுப்பினர். விவசாயிகளின் உரப் பிரச்சினைக்கு தீர்வு தருமாறும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினையை தீர்த்து வைக்குமாறும் வலியுறுத்தினர். (ம-3)

## முதியவர்கள்...

வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று வெள்ளிக்கிழமை காலை வேளையில் மட்டுவில் வடக்கு சந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 70 வயதான முதியவர் ஒருவர் தண்ணீர் எடுக்கச் சென்ற சமயம் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அத்துடன் மட்டுவில் தெற்கு சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 79 வயதான முதியவர் ஒருவரும் இவ்வாறு வீட்டில் உயிரிழந்துள்ளார்.

அதேசமயம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 83 வயதான மூதாட்டி ஒருவருமே இவ்வாறு திடீரென உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிசிஆர் முடிவுகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. (ம-3,30)

## உயிரிழந்த...

வயது மூதாட்டி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வடக்கின் நிலை...

விக்னேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடியபோது வடக்கின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் கேட்டறிந்தார்.

மேலும் வடக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் விக்னேஸ்வரனின் உடல்நலம் தொடர்பிலும் ஆளுநர் விசாரித்து அறிந்து கொண்டார். (ம-3)

## நாடு...

பொது பாதுகாப்பு சட்டமூலத்தின் 12 ஆவது சரத்தில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதி, இந்தக் கட்டளையை பிறப்பித்துள்ளார்.

பாராளுமன்ற அவை நிகழ்வுகளின் ஆரம்பத்தில் சபாநாயகர், ஜனாதிபதியின் இந்த கட்டளை குறித்து அறிவித்துள்ளார்.

மேலும், இதே போன்றதொரு கட்டளை கடந்த மாதமும் பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பயங்கரவாதி...

யால், வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் நேற்று பதற்றமான சூழ்நிலையொன்று நிலவியது.

பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், ஆலோசனைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலின் சில பிரச்சினைகளை எழுப்ப முயன்றபோதே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, இந்த விவகாரம் குறித்து விவாதிக்க அனுமதி மறுத்துள்ளதுடன், மாறாக அவர்களை நோக்கியும் சத்தமிட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களை பயங்கரவாதிகள் என்று அழைத்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்ததாகவும், இது மிகவும் துரதிர்ஷ்டவசமான சம்பவமென்றும், இந்த சபையில் இடம்பெற்ற ஒரு சோகமான தருணம் என்றும் சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ம-3)


மெகா பவர்
திகதி 22/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0911
வெற்றி எழுத்து H சுப்பர் இலக்கம் 18 வெற்றி இலக்கங்கள் 22 23 27 79

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/10/22 சீட்டிழுப்பு இலக்கம் 1623
சுப்பர் இலக்கம் 13 வெற்றி இலக்கங்கள் 25 42 53 56
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2021/10/22
சீட்டிழுப்பு இலக்கம் 4563
ஆங்கில எழுத்து N வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 4 3 1 6 4
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 22.10.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2858
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 07 28 36 59
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.10.22
சீட்டிழுப்பு இலக்கம் - 593
I 05 49 54 72
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1366
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி: 22.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,776,826
வெற்றி இலக்கங்கள் 18 46 50 71 ஆங்கில எழுத்து L
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3701
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி: 22.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,412,816.80
வெற்றி இலக்கங்கள் 01 07 30 34 ஆங்கில எழுத்து B
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,414,646.20/=
திகதி : 22.10.2021
வெற்றி வாரம் : 3252
வர்ணம் :
வெற்றி இலக்கங்கள் 06 18 39 47 மேடம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1540 நிறம்
சீட்டிழுப்பு திகதி 22.10.2021 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் F 08 41 65 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் 66,875,877.60/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

சீட்டிழுப்பு வாரம்: 755
திகதி: 22.10 2021
வெள்ளிக்கிழமை
N 13 22 48 79
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,953,550
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## வாடகைக்கு

நாச்சிமார் கோவிலடி, வண்ணார் பண்ணை, கே.கே.எஸ் வீதிக்கு மிக அருகாமையில் வீட்டுடன் கடை அல்லது வீடு வேறு, கடை வேறாக வாடகைக்கு உண்டு. (8356)

**077 536 1370**

## அறை வாடகைக்கு

கந்தர்மடத்திற்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் அறை வாடகைக்கு உண்டு

(கல்வி கற்கும் / பணிபுரியும் பெண்கள் விரும்பத்தக்கது.) (8323)

**077 546 7643**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2831)

**0768226240** DHL

## Win repair

உங்கள் குளிர்சாதனப் பெட்டி பழுதடைந்து விட்டதா? உடனே எம்மை அழையுங்கள்! குறித்த நேரத்தில் உத்தரவாதத்துடன் செய்து தருகின்றோம்.

தொடர்பு (8365)

**077 964 8942**

## நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் 09 நாட்களே

### அமெரிக்க அதிஸ்ட விசா

ஒரு தடவை மட்டும் பதிவுசெய்து கிடைக்காமல் அலுத்துக்கொண்டால் இந்தத்தடவை உங்களுக்குரிய வெற்றிவாய்ப்பை இன்னொருவருக்கு நீங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள் என எடுத்துக்கொள்ளலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

**0768226244**

55000 இலவச விசாக்கள்

முதல் வருடம் பதிந்த போது எமக்கு கிடைக்கவில்லை, நான் மனம் தளரவில்லை இரண்டாவது வருடமும் V2 Travels ஊடாகவே விண்ணப்பித்தேன். அமெரிக்க விசா அதிஸ்ட சாலிகளுள் ஒருவராக எமது குடும்பமும் தெரிவுசெய்யப்பட்டது ஒருவேளை நாம் தெரிவுசெய்யப்படாமல் விட்டிருந்தால் கூட நான் மீண்டும் மீண்டும் அதிஸ்ட விசா கிடைக்கும் வரை முயற்சி செய்துகொண்டே இருப்பேன். ஏனென்றால் V2 Travels ஊடாக ஏற்கனவே எனக்கு தெரிந்த பலர் அமெரிக்க விசா வென்றுள்ளதால் எனது தெரிவு என்றுமே V2 Travels தான்.

(C-2833)




பிரகாஷ் குடும்பம்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

**V2 Travels**

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை இராமலிங்கம்

(இளைப்பாறிய இறைவரித் திணைக்கள உத்தியோகத்தர், முன்னாள் முகாமையாளர் - டேடன்ஸ் ஆய்வுகூடம், யாழ். கிளை)

யாழ்ப்பாணம் உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் இல. 166, 1ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராமலிங்கம் நேற்று (22.10.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும் ஸ்கந்தகுமாரியின் அன்புக் கணவரும் பொன்னையா, செல்லத்துரை, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் அபிராமி (அவுஸ்திரேலியா), சிவராமி (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr. நவநீதன் (அவுஸ்திரேலியா), ஞானாகரன் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அரினி, நயனி, மாதவ், அனாயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (24.10.2021) ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2866)

இல. 166, 1 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 3721
தகவல்:- மனைவி, பிள்ளைகள்


# எங்கள் எசமானை நெஞ்சம் மறக்குமா...!



நல்லூர் எசமான் மாப்பாண முதலியாருக்கு
வல்லமை மிக்க நல்லூர் இராஜதானியின் தலைமகனுக்கு
வாஞ்சை காட்டி செங்குந்தர் வணங்கும் தமிழ் மகனுக்கு
எல்லோரும் வாழவேண்டுமென நினைக்கும்
நல்லைப்பதியின் நாயகனுக்கு
உலக வேற்கோட்ட நாயகன் நல்லூரானுக்கு
காலமெல்லாம் கொடிச்சீலை கொடுக்கும்
வீரப்பரம்பரையின் அஞ்சலிகள்.
சூரசம்காரம் நல்லூரில் நடக்கும் வேளைகளில்
வீரவாகு தேவரின் சேனைகளானவரின் அஞ்சலிகள்.
நீள நினைப்பதற்குரிய நல்லூர் எசமானரே!
நெஞ்சம் மறக்குமா
செங்குந்தருடன் பழகிப் பகிர்ந்த நினைவுகளை....



(8366)

**CSK** தெய்வேந்திரம் அன் சன்ஸ் மருந்துக்கடை
இல. 02, செங்குந்த சந்தை, நல்லூர், யாழ்ப்பாணம்.

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்...

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

## தீபாவளி விசேட தள்ளுபடி

அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் சுகாதார வழி முறைகளுக்கு அமைவாகவும் இந்தியன் செலக்ஷனின் தீபாவளி மலிவு விற்பனை நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியோடு வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

பட்டுச்சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள், சிறுவர், சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள் மற்றும் ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைத் தெரிவுகள்.

இம்முறை தீபாவளியை இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-2864)





ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

**இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்**

**காலம் : 22.10.2021 - 07.11.2021 வரை**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.